# தளிர்

புரட்டாதி

ஐப்பசி:

1985

விலை

ரூபா: 4.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான நீண்டகாலம் பாவிக்கக்கூடிய
மண்ணெண்ணை, பெற்றோல்
ஆகியவற்றில் இயங்கும்

**UNION**

★

மின்சாரத்தில் இயங்கும்

**SINGER**

நீர் இறைக்கும் இயந்திரங்கள்
எம்மிடம் விற்பனைக்கு உண்டு

# SAMUEL SONS & CO. LTD

**206, 208 Hospital Road, Jaffna**

T. Phone--**22462**

---

# ★ KLEEN KHUT ★

உங்களுக்குத் தேவையான

- தட்டெழுத்து வேலைகள்
- போட்டோஸ்ரற் பிரதிகள்
- தரமான தையல் வேலைகள்

ஆகியவற்றிற்கு நாடுங்கள்

# கிளீன் கட்

239 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி:-22823



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிர்

திரள்: 3 இல: 6, 7

புரட்டாதி-ஐப்பசி; 1985

விலை ரூபா: 4.00


## உள்ளே


- ஸ்ரீலங்கா அரசிற்குள் ஒரு "நான்கு தலை கபினெட்"
- தமிழீழப் பொருளாதாரத்தில் விவசாயத்துறையின் முக்கியத்துவம்
- மக்கள் அமைப்புக்கள் பற்றி......
- தேசமெனும் தகமை ஐதீகங்களும் யதார்த்தங்களும்
- தமிழீழப் பகுதிகளில் நீர்வளம்
- நவகாலனித்துவம்—3
- பயங்கரவாதத்தின் அனுசரணையும் அதனது பிரசாரகர்களும்
- நமது கலாசாரம் பற்றி....
- தென்னாபிரிக்கா: இன்னொரு தமிழீழம்


## தொடர்புகட்கு


"தளிர்"
ஆசிரியர் குழு
யாழ்-பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.


★ தவிர்க்கமுடியாத காரணங்களால் புரட்டாதி மாதத் தளிரை குறிப்பிட்ட திகதியில் வெளியிடமுடியவில்லை.

★ தளிர் பற்றிய கருத்துக்களையும், உள்நாட்டு வெளிநாட்டு அரசியல்-பொருளாதர சமூக நிலைமைகள் பற்றிய ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.

## போராட்டத்தைக் காப்பாற்றுவோம்

இன்று தமிழீழப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் கொள்ளை, கொலை போன்ற நடவடிக்கைகள் எமது போராட்டத்தில் பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளன. கொள்ளைகள் பற்றிய கண்டனங்கள் பரவலாக எழுந்த போதும் இவை தொடர்கின்றன. எமது போராட்டத்தினை அழிப்பதற்காகத் திட்டமிடப்பட்ட ரீதியில் இவை நடாத்தபபடடால் அச்சக்திகள் இனங்காணப்பட்டு மக்கள் முன்னிலையில் அம்பலப்படுத்தப்பட்டு அழிக்கப்படவேண்டும்.

ஆனல் எமக்குக் கிடைக்கும் தகவல்கள் மூலம் நிதிப்பற்ருக்குறையினை நிவர்த்தி செய்வதற்காக சில விடுதலை இயக்கங்களும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அறிய முடிகின்றது இவை கவலைக்குரியதும் கண்டனத்துக்குரியதும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டியதுமான நடவடிக்கைகளாகும்.

**ஏன் இந்த நிலை ஏற்பட்டது?**

விடுதலை இயககஙகள் பொருளாதாரத்தை ஒழுங்கான முறையில் திட்டமிடாமல் தங்களுடைய ஏனைய செயற்பாடுகளை விரிவுபடுத்தியமை, 83ம் ஆண்டு ஆடி மாதததின் பின் ஏற்பட்ட வீசுசு நிலையினூடாக ஏராளமானவர்கள் இயக்கங்களில் சேர்ககப்படட அதே நேரம் நீணட கால நோக்கில் பொருளாதாரததிற்கான அடித்தளம் அமைக்கப்படாமை போன்ற காரணங்களால் இவற்றை முன்னுணர்ந்து செயற்பட்ட இயக்கங்களைத் தவிர ஏனையவை பாரிய நிதிநெருககடியை எதிர் நோக்கின. விடுதலையில் கொள்ளை போன்ற நடவடிக்கைகள் ஏற்படுத்தும பின்னடைவை பற்றிய எதுவித கவலையுமற்ற, நிதிநெருக்கடிக்குள்ளான இயக்கங்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

**இதற்கான தீர்வு-**

இதற்கு தற்காலிகத் தீர்வேனும் காணப்படுவதற்கு இயக்கங்களின் நிதிப்பற்ருக்குறைநிவர்த்தி செய்யப்படுவது அவசியமானதாகும். நிதிப்பற்ருக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு இருவழிகளைக் கையாள முடியும்.

(1) வருமானத்தை அதிகரித்தல்.

(2) தேவையற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்தல்.

வருமானத்தை அதிகரிப்பதக்கு விடுதலை இயக்கங்சள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியமானதாகும். இன்று அந்நியப் பொருட்களுக்காக எமது பணம் ஏராளமாக செலவிடப்படுகின்றது. உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதனூடாக அந்நியப் பொருட்களுக்குச் செலவிடப்படும் எமது பணத்தை எமது விடுதலைக்காகப் பயன்படுத்த முடியும்.

விடுதலை இயக்கங்களின் அங்கத்தவர் ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் நடந்து தேவையற்ற செலவினங்களைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அதேசமயம் விடுதலை இயக்கங்கள் சரியான முறையில் அவற்றிற்குரிய பொருளாதாரங்களைத் திட்டமிட்டு அதற்கேற்றவாறு ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் இவற்றைப் பற்றி பொருட்படுத்தாது நிதிநெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்காக கொள்ளை போன்ற நடவடிக்கைகளை விடுதலை இயக்கங்கள் தொடருமானல் எமது போராட்டம் அழிக்கப்பட்டுவிடும். எனவே போராட்டம் காப்பாற்றப்பட வேண்டுமானல் அதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டேயாக வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பயங்கரவாதிகட்கெதிராக பொதுமக்கள் ஆயுதமேந்திவிட்டனர்" –ஸ்ரீலங்கா அரசு

"வட மாகாணத்தில் நடைபெற்று வரும் கொலை, கொள்ளை சம்பவங்களை பொது மக்கள் கண்டித்து வருகிறார்கள். இந்த வகையில் பொது மக்கள் வீதிகளில் தடைகளைப் போட்டு பயங்கரவாதிகட்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன் பொதுமக்களே ஆயுதபாணிகளாக தங்கள் தங்கள் கிராமங்களை பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாத்து வருகிறார்கள்" இது ஐப்பசி மாதம் பதினான்காம் திகதி சனிக்கிழமையன்று ஸ்ரீலங்கா அரச வானொலியினால் அறிவிக்கப்பட்ட செய்தி.

போராட்டத்தின் பரிணாமங்களை உணர்ந்து கொள்ளாமல் எம்மவர் சிலரால் மேற்கொள்ளப்படும் கொலை, கொள்ளை போன்ற நடவடிக்கைகள் எதிரியினால் போராட்டத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்படும் என்பதற்கு மேற்கண்ட செய்தி ஒரு நல்ல உதாரணமாகும். போர்நிறுத்த காலத்தில் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளும் அதே வேளை எமது போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டுள்ளது.

எமது மக்களின் சாம்பல் மேடுகளுக்குக் காரணமாகவிருந்து, போர் நிறுத்தக் காலப் பகுதியிலும் எமது மக்களைக் கோரமாகக் கொன்று குவித்து வரும் ஸ்ரீலங்கா அரசின் கூலிப்படையினருக்கு, குடா நாட்டுப் பகுதியில் திடீரென மக்கள் மீது பரிவு பிறந்து விட்டது. குடா நாட்டின் சில இடங்களில், மரண ஊர்வலங்களில் பங்கு கொள்வது. சோதனைகளின் போது மக்களுடன் அன்பாக நடந்துகொள்வது, சோதனைகளின் போது சிறுபிள்ளைகளுக்கு இனிப்பு வழங்குவது போன்ற நடவடிக்கைகளில் கூலிப்படையினர் ஈடுபட்டுள்ளனர். இங்கு நடைபெற்ற கொள்ளை, கொலை போன்ற நடவடிக்கைகளால் மக்கள் மனவேதனை அடைந்துள்ள இவ்வேளையில் மேற்கண்ட பிரச்சாரங்களினூடாக போராளிகளுக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள இடைவெளியை விரிசலடையச் செய்ய முயற்சிக்கும் அதேவேளை பொதுமக்களிடம் அன்பாக நடப்பது போலக் காட்டிக் கொள்வதன் மூலம் தங்களுக்கும் மக்களுக்கும் இடையே நெருக்கத்தை ஏற்படுத்தி மக்களாகவே போராளிகளைக் காட்டிக் கொடுக்க முன்வரக்கூடிய சூழ்நிலையினை உருவாக்குவதே கூலிப்படையினரின் திட்டமாகும். ஆனால் எமது மக்கள் இக்கபட நாடகத்தை நன்கு உணர்ந்துள்ளார்கள்.

போர் நிறுத்தச் சூழ்நிலையானது எதிரிக்குச் சாதகமாக அமையாமல், எமது போராட்டம் பற்றிய தெளிவான சிந்தனைகளை மக்கள் மத்தியில் முன்வைத்து அவர்களை கருத்து ரீதியாக வளர்த்தெடுப்பதற்கு பயன்படுத்தப்படவேண்டும். இதற்கு முன்னோடியாக மக்களால் வெறுக்கப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்வதனைப் போராளிகள் தவிர்த்துக்கொள்ளவேண்டும். இன்று தேவையற்ற விதத்தில் அதிவேகமாக வாகனங்களில் ஆயுத பாணிகளாகப் பவனிவருதல், வீதிகளில் தேவையற்ற விதத்தில பொழுது போக்குதல் போன்ற நடவடிக்கைகள் மக்களால் வெறுக்கப்படுகின்றன.

போராட்டம் பற்றிய தெளிவான கருத்துக்களை எல்லோராலும் விளங்கக்கூடிய வகையில் கலாசார நிகழ்ச்சிகளினூடாக வெளிப்படுத்தமுடியும். இக் கலாசார வெளிப்பாடுகள் நமது பாரம்பரியத்தில் இருந்து ஊற்றெடுப்பவையாக அமைதல் நமது கலாசாரத்தைச் செழுமைப்படுத்தும். இத்தகைய கலாசார நிகழ்ச்சிகளில் விடுதலை ஸ்தாபனங்கள் ஊக்கம் செலுத்துவதனூடாக முதலாளித்துவக் கலாசாரச் சீரழிவுகளைத் தவிர்க்கமுடிவதுடன் மக்களின் போராட்ட உணர்வு மழுங்கடிக்கப்படாமல் பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மிகவும் அவசியமானதொன்றாகும். நீண்டகால அடிப்படையில் மக்களில் தங்கியிருந்து போராட்டத்தை முன்னெடுத்தல் என்பது விடுதலை ஸ்தாபனங்கள் உற்பத்தி நடவடிக்கைகளை விஸ்தரிப்பதனூடாகவே சாத்தியமாகும். அத்தோடு அவசரகால உணவாக உணவுப்பொருட்கள் எவ்வாறு சேமித்துவைக்கப்படலாம் என்பது குறித்தும் ஆராய்ச்சிகள்மேற்கொள்ளப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல்வேண்டும்.

எனவே போர்நிறுத்த காலத்தினை போராட்டத்திற்குச் சாதகமான வழிகளில் பயன்படுத்துவதில் விடுதலை ஸ்தாபனங்கள் கூடியகவனம் செலுத்தல் வேண்டும் போர் நிறுத்தத்தினை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் எமது போராட்டத்தின் முன்னேற்றம் தங்கியுள்ளமையினால் இவ்விடயத்தில் உடனடி நடவடிக்கைகள் அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா அரசுக்குள் ஒரு "நான்கு தலை கபினட்"

→நேதாஜி←

சிறிலங்காவின் ஆளும் ஐ.தே.கட்சி அரசிற்குள் தலைமைப் பீடத்திற்கு அடுத்து யார் வருவது என்பதில் அதாவது பட்டத்து அரசனாக யார் முடிசூடிக் கொள்வது என்ற போட்டி நீண்டகாலமாகவே நிலவி வருகிறது. ஆனால் முதியவர் ஜே. ஆருக்கு வயசு ஏற ஏற இந்தப்போட்டி அண்மைக் காலமாக மிகவும் தீவிரமடைந்து வருவதை நன்கு அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. போகிற போக்கைப் பார்த்தால் ஒருவரை ஒருவர் அகற்றி பொனபாட் வழியில் அந்தக் கிரீடத்தைத் தமக்குத்தாமே சூடி பட்டாபிஷேகம் செய்து கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று கூறும் அளவுக்கு இந்தப் போட்டா போட்டி வளர்ந்து கொண்டு வருகிறது.

## பிரேமதாசா - லலித் மோதல்

ஜே.ஆரின் மந்திரி சபையில் முன்னர் வர்த்தக அமைச்சராகவிருந்த லலித் அத்துலத்முதலியை 1984ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜே.ஆர். தேசிய பந்தோபஸ்து அமைச்சராக நியமித்து தமிழ்த்தீவிரவாதப் போராட்ட நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்குமாறு பணித்தார். லலித் அத்துலத்முதலியோ அப்பதவியைப் பெற்றநாள் தொடக்கம் தமிழ்ப் போராட்ட நடவடிக்கைகளையொட்டிய செய்திகளை உண்மைக்குப் புறம்பான முறையில் வெகுஜனத் தொடர்பு சாதனங்களினூடாக வெளியிட்டு சிங்கள மக்கள்மத்தியில்மிகவும் நெருக்கடியான கால கட்டத்தில் சிங்களமக்களையும் புத்தமதத்தையும் காக்க வந்த இரண்டாவது துட்டகெமுனுவைப் போலவும் தமது தலைமையில் யுத்தம் புரியும் சிங்கள இராணுவத்தினரை தேசிய வீரர்களாகவும் காட்டி தமது எதிர்கால அரசியல் நலன்களுக்குத் தமது பதவியைப் பயன்படுத்தத் தொடங்கினார். இதற்காக அவர் முக்கியமாக இரண்டு யுக்திகளைக் கையாண்டார். ஒன்று, சிங்கள இராணுவத்தினர் வடபகுதியில் அகால மரணமடையும் போது இறக்கும் சிங்கள இராணுவ சிப்பாய்களது தொகையைக் குறைத்துக் காட்டினார். அதே வேளையில் வடபகுதியில் சிங்கள சிப்பாய்களால் அநியாயமாக சுட்டுக் கொல்லப்படும் அப்பாவித் தமிழர்களையெல்லாம் "பயங்கரவாதிகள்" எனப் பட்டம் சூட்டி யுத்தத்தில் தமது படைகள் வெற்றி வாகை சூடிவருவதாக சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தார். அடுத்ததாக லலித் அத்துலத்முதலி தனது இலட்சியத்தை செயற்படுத்த மிகவும் சக்தி வாய்ந்த வெகுஜனத் தொடர்புச் சாதனமான தொலைக்காட்சிச் சேவையைப் பயன்படுத்தி சிங்கள மக்கள் மத்தியில் தனது விம்பத்தை (இமேஜ்) வளர்த்துக் கொள்வதும் தினமும் தொலைக்காட்சியில் தோன்றி அந்த "இமேஜை" நிலை நிறுத்திக் கொள்வதுமாகும். லலித் அத்துலத்முதலி தனது அமைச்சிற்கென 'ரூபவாகினி" கூட்டுத்தாபனத்தில் ஒரு தனியான கமரா யூனிற் ஒன்றை அமைத்துக் கொண்டதும் இந்த நோக்கம் கருதியேயாகும்.

லலித்தின் இந்த நடவடிக்கைகள் பிரதமர் பிரேமதாசாவுக்கு லலித் மீது வெறுப்புணர்ச்சியை உருவாக்கியது. உபாலி விஜயவர்த்தனவின் அகாலமரணத்தினால் நிம்மதிப் பெருமூச்சுவிட்ட பிரேமதாசா தனக்கும் சமதையாக மற்றுமொரு அரசியல் எதிரி உருவாகி வளர்ந்து வருவதை உணரத் தொடங்கினார். சிங்களப் பகுதிகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பணஉதவியுடன் மூலைக்கு மூலை மாதிரிக் கிராமங்களையும் இன்னோரன்ன நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அடுத்த ஜனாதிபதித் தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனுக்குத் தன்னை தயார் படுத்திவரும் பிரேமதாசாவுக்கு லலித்தின் செயல்கள் அவர் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதனால் அவர் ஆரம்பத்தில் இந்திய விரோத உணர்வுகளைத் தூண்டும் உரைகளை ஆற்றியதோடு இலங்கை—இந்திய உறவுகளில் மேலும் விரிசல்களை வளர்க்கத் தொடங்கினார். 1984 ஆம் ஆண்டு ஒவ்வொரு மாதமும் அவசரகாலநிலை நீடிப்பு விவாதத்தின் போது பிரேமதாசாவால் பேசப்பட்ட பேச்சுக்கள் யாவும் இந்தியாவுக்கும் குறிப்பாக இந்திரா காந்திக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட பேச்சுக்களைப் பார்த்த இந்திய வெளிவிவகார அமைச்சு இந்திராகாந்திக்கு எதிராக இவ்வளவு கேவலமான பேச்சுக்களை யாருமே பேசவில்லை என்று வெளிப்படையாகவே இலங்கை மீது குற்றம் சாட்டியது.

இந்தியவிரோத உணர்வுகளைத் தூண்டி தனது அரசியல் இலாபத்தை அடைய பிரேமதாசா எடுத்த முயற்சிகள் ராஜீவ் காந்தி பிரதமரான பின்னர் இலங்கை—இந்திய உறவில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக அவருக்கு சாதகமாக அமையாது போகவே பிரேமதாசா வெளிப்படையாகவே லலித்தை சாடத்தொடங்கினார். இதற்கு இன்னுமொரு காரணம் அநுராதபுர சம்பவங்களின் பின்னர் ஜே. ஆர். லலித் பரஸ்பர நம்பிக்கையில் ஏற்பட்ட கசப்புணர்வுகளையும் பிரேமதாசா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தத்தொடங்கினார். ஜூன் மாதம் 18 ஆம் திகதி யுத்தநிறுத்தம் வந்த கையோடு லலித் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தீவிரவாதிகள் தமது படையினரோடு மோதி வெல்ல முடியாது எனக்கண்டமையால்தான் ஆயுதங்களைக் கீழே போட்டனர் என்று குறிப்பிட்ட போது மறுநாளே பிரேமதாசா அதை மறுக்கும் வகையில் படையினரின் வீரதீரச் செயல்களால் தீவிரவாதிகள் ஒன்றும் ஆயுதங்களைக் கீழேபோடவில்லை. மக்களது பிரார்த்தனையால் தான் அவர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டனர் என அறிக்கை விட்டார். இதன் பின்னர் ஜூலை மாதம் 22ம் திகதி பாராளுமன்றத்தில் அவசரகாலநிலை நீடிப்பு தொடர்பான விவாதத்தில் பேசும் போதும் தீவிரவாதிகள் எமது படையினருக்குப் பயந்து ஆயுதங்களைக் கீழே போடவில்லை ராஜீவ் காந்தியின் வேண்டுகோளுக்குச் செவிமடுத்தே ஆயுதங்களைக் கீழே போட்டனர் என்று பேசிய போது மறுநாள் லலித் அத்துலத்முதலி தனது பத்திரிகை அறிக்கையில் ''எமது படையினருக்கு அஞ்சியே தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போட்டனர். யாரும் எமது படையினரின் திறமையைக் குறைத்து மதிப்பிடக் கூடாது'' எனப்பதில் அறிக்கை விடுத்தார்.

இவையாவும் இப்போது இருவருக்கும் இடையில் கருத்து மோதல்கள் தீவிரமடைந்து வருவதை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

## லலித் - அல்விஸ் மோதல்

இராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸட அல்விஸ் பாராளுமன்ற அரசியலுக்குள் புகுந்தது 1977ம் ஆண்டுதான் என்றாலும் ஐ தே கட்சியின் சிரேஸ்ட உறுப்பினராக அவர் ஐம்பதுகளிலேயே சேர்ந்து கொண்டார் ''அல்விஸ் அட்வடைசிங்'' கம்பனி நிர்வாக இயக்குனரான அல்விஸ் ஐ தே.கட்சியின் முக்கியஸ்தர்களுடன் கொண்டிருந்த அரசியல் தொடர்பும் அரசியல் அநுபவமுமே பாராளுமன்ற அரசியலுக்குள் புகுந்த கையோடு அவர் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட காரணமாகவிருந்தது. சேனநாயகா குடும்பத்தின் செல்லப் பிள்ளையாக அல்விஸ் இருந்த போது ஒரு பாடசாலை மாணவனாகவிருந்த லலித் திடீரென கட்சிக்குள் செல்வாக்கு பெற்றுவருவதை அல்விஸ் மனத்திற்குள் விரும்பவில்லை. அவர் தான் அடுத்த ஜனாதிபதியாக வேண்டுமென்று விரும்பாவிட்டாலும் அடுத்த பிரதமராகவாவது வரலாம் என்ற நம்பிக்கையோடு இருந்தார். ஆனால் லலித்தின் அரசியல் போக்குகளினால் இந்த நம்பிக்கை கேள்விக் குறியானது முதியவர் ஜே ஆரின் இறப்பை அடுத்து உடனடியாக லலித் ஜனாதிபதியாகாவிடினும் அடுத்த பிரதமராக வரக்கூடிய வாய்ப்பைப் பெற்று விடுவாரோ என்ற அச்சம் காரணமாக அல்விசும் லலித்தைச் சாடத் தொடங்கினார்.

(6 பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழப் போராட்டத்தில் விவசாயத்துறையின் முக்கியத்துவம்

—பார்த்திபன்—

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் தனித்துவப்பண்பான "விவசாயத்துறையில் பெருமளவு தங்கியிருத்தல்" என்பதற்கு தமிழீழப் பொருளாதாரமும் விதிவிலக்கானதல்ல! தமிழீழப் பொருளாதாரத்தின் அடிப்படையாக விவசாயத்துறையே அமைந்துள்ளது. அதிகளவு மக்கள் தங்கிவாழ்கின்ற துறையாகவும் மக்களுக்கு உணவினை வழங்குகின்ற துறையாகவும் விவசாயத்துறையே அமைந்துள்ளது. உத்தேச தமிழீழம் உள்ளடக்கியுள்ள யாழ்ப்பாண (கிளிநொச்சி உட்பட) மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் மொத்த சனத்தொகை 1981-ம் ஆண்டுக் கணிப்பின் படி 18,11,436 பேர் ஆகும். (சிங்களவர்கள் தவிர்த்து) இதில் 13,24,520 பேர் தமிழீழத்தின் கிராமங்களில் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது மொத்த சனத்தொகையில் ஏறத்தாழ 73%தினர் கிராமங்களில் வாழ்கின்றனர் இதனால் கிராமியத்துறையில் — விவசாயத்துறையில் ஏற்படுகின்ற முன்னேற்றங்களின் ஊடாகவே தமிழீழப் பொருளாதாரத்தின் அபிவிருத்தியும் மக்களின் வாழ்க்கைத்தர உயர்வும் ஏற்படமுடியும். உயிர்வாழ்வதற்கான அடிப்படை உணவேயாகும் அத்துடன் பசியை ஒழிப்பதே மனிதத்தேவையின் அடிநாதமாகும். இதனையே பாரதி தனியொருவனுக்கு உணவில்லையெனில் இவ் ஜகத்தினை அழித்திடுவோம் என சூளுரைத்தான். இதனையே தமிழீழப் பொருளாதாரத்தின் அடிப்படை இலட்சியமாக நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

பொருளாதார அபிவிருத்தியின் ஆரம்ப கட்டங்களில் விவசாயமே முன்னணியில் இருக்கவேண்டிய ஒரு அடிப்படையான துறையாகும் பொருளாதாரத்தின் உள்ளமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான மிகை உற்பத்தியைத் தரக்கூடியது விவசாயத்துறையே. பொருளாதார அபிவிருத்திப் போக்கில் நாடு படிப்படியாக கைத்தொழில் மயமாக்குவதனை அவதானிக்கமுடியும். ஆனால் இவ்வாறான அபிவிருத்திப் போக்கிற்கு முன்னிபந்தனையாக விவசாயத்துறையின் அபிவிருத்தி என்பது அமைகிறன்து. அதாவது விவசாயத்துறை பல வழிகளில் நாடு கைத்தொழில் மயமாக்கலை நோக்கிப் படிப்படியாக முன்னேறிச்செல்வதற்கு உதவுகின்றது.

பொருளாதார அபிவிருத்தியின் ஆரம்பகட்டங்களில் உணவுக்கான தேவை அதிகரித்துக்கொண்டுவரும். இதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம்.

1. வருமான மட்டங்கள் அதிகரிப்பதனால் நுகரப்படும் உணவின் அளவு அதிகரிக்கும் எனவே உணவுக்கான தேவை அதிகரிக்கின்றது

2. சுகாதார மருத்துவ சேவைகளின் முன்னேற்றங்களினாலும் மக்களின் வாழ்க்கைத்தர உயர்வினாலும் இறப்பு வீதம் வேகமாகக் குறைவடையும். இதனால் சனத்தொகை வேகமாக அதிகரிக்க உணவுத்தேவையும் அதிகரிக்கின்றது. இவ்வாறு அதிகரித்துவரும் உணவுத்தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு உணவு உற்பத்தியினை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும். மேலும் கைத்தொழிலாக்கத்திற்குத் தேவையான தொழிலாளர்கள் விவசாயத்துறையிலிருந்தே செல்லல் வேண்டும். எனவே விவசாயத்துறையிலிருந்து தொழிலாளர்கள் விடுவிக்கப்படல் வேண்டும். இதனால் விவசாயத்துறையின் உற்பத்தித்திறன் அதிகரிக்க வேண்டியது அவசியமாகும். மேலும் நாடு கைத்தொழில் மயமாகிக்கொண்டு வரும்போது நாட்டில் அதிகரித்து வருகின்ற விவசாய சம்பந்த மற்ற தொழிற்படைக்கு உணவளிக்க வேண்டியதும் விவசாயத் துறையின் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தமது கைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான இயந்திர சாதனங்களையும், மூலதனத்தையும் இறக்குமதி செய்யவேண்டியுள்ளது. இவ் இறக்குமதிக்குத் தேவையான அந்நியச் செலவாணியை விவசாய உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலமே பெறமுடியும். எனவே விவசாயத்துறை தன்னிறைவினை அடைவதனை மட்டும் நோக்கமாகக் கொண்டிராது உற்பத்தி மிகையினையும் செய்யவேண்டியுள்ளது. அது மட்டுமன்றி கைத்தொழில் துறைக்கு மூலப்பொருட்களை வழங்குகின்ற பணியினையும் விவசாயத்துறை செய்யவேண்டியுள்ளது.

மேலே கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரம் ஒன்றில் விவசாயத்துறையின் பங்களிப்பு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது புலனாகின்றது. இத்தகைய பொருளாதாரங்களில் தலைமை தாங்கி அபிவிருத்திக்கு வழியமைத்துக்கொடுப்பது விவசாயத்துறைதான். விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யாமல் - அதனது பங்களிப்பு இல்லாமல் நாட்டின் ஏனைய துறைகளின் பொருளாதார அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறைப்பிரசவக் குழந்தையாகவே இருக்கும். எனவே கைத்தொழிலாக்கத்திற்கு ஒரு முன்தேவையாக விவசாய உற்பத்தியிலும், உற்பத்தித் திறனிலும் அதிகரிப்பு ஏற்பட வேண்டும். அதாவது கைத்தொழில் புரட்சி ஒன்றினை ஏற்படுத்துவதற்கு முன்னர் ஒரு விவசாயப்புரட்சி - பசுமைப் புரட்சியினை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். இக்கருத்துக்களின் அடிப்படையில் தமிழீழத்தில் ஒரு விவசாயப்புரட்சி - பசுமைப்புரட்சியினை ஏற்படுத்துவதற்கு தடைகளாக உள்ளவை யாவை? என்பதனை தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும்.

(தொடரும்)

## ஸ்ரீலங்கா அரசுக்குள் . , . .

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தநிறுத்த மீறல்களை பெருமளவில் செய்து வருவதாக இரண்டு பிரதான தமிழ் இயக்கங்கள் மீது லலித் குற்றம் சாட்டிய மறுநாள் நடந்த ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டில் அல்விஸ் அவர்கள் லலித்தின் கருத்தை மறுத்து திம்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் எந்த இயக்கமும் யுத்த நிறுத்த விதிகளை மீறவில்லை என வெளிப்படையாகவே குறிப்பிட்டிருந்தமையை கொழும்புப் பத்திரிகைகள் முதல்பக்கச் செய்தியாக வெளியிட்டு இருந்தன. இப்படியாக பல உதாரணங்களைக் காட்டலாம்.

### லலித் - டீமெல் மோதல்

ஜூலை மாதம் வெளியான ஞாயிற்றுக் கிழமை "ஐலண்ட்" பத்திரிகை ஒன்றுக்கு லலித் அத்துலத்முதலி அவர்கள் கொடுத்த பேட்டி ஒன்றில் "இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டால் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்கும்படியான ஒரு மந்திரிப் பதவியை (நிதிமந்திரி) ஏற்கும்படி நான் அழைக்கப்படுவேன்" எனக் குறிப்பிட்டுக் கொடுத்த பேட்டியின் பின்னர் லலித் — டீமெல் மோதல் உருவாகியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உறுப்பினரான ரொனி டீ மெல் தமக்கு ஸ்ரீமாவோ அம்மையாரின் அமைச்சரவையில் மந்திரிப் பதவி கிடைக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காகவே அதிலிருந்து விலகி ஐ.தே. கட்சியில் சேர்ந்தவர். அவருக்கு லலித்தின் மேற்படி பேச்சு எரிச்சலையூட்டியது. வீரப்போர் புரிந்துவருவதாகக் கூறிக்கொள்ளும் லலித்தின் கையாலாகத்தனத்தை எடுத்துக் காட்டவே அவர் அண்மைக் காலத்தில் "தனிநாடு தோன்றுவது தவிர்க்க முடியாமல் போய்விடும்" என்ற தோரணையிலான பேச்சுக்களை நிகழ்த்தி வருகிறார். உண்மைநிலை இதுவானாலும் கூட ஒரு கபினெட் அமைச்சர் இவ்வாறு பகிரங்கமாகப் பேசுவதுடன் உள்நோக்கம் வேறு என்று கருதப்படுகின்றது.

இவ்வாறாக இன்றைய சிறீலங்காவின் மந்திரிசபையை எடுத்துக் கொண்டால் அதற்குள் நான்கு தலைகள் பகிரங்கமாகவே மோதிக் கொள்வதையிட்டு அரசியல் விமர்சகர்கள் இந்த மோதல் ஜே.ஆரின் இறப்பின் பின் ஐ.தே.கட்சிக்குள் பெரும் குழப்பத்தை உருவாக்கும் என கணிப்பிட்டு வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் அமைப்புக்கள் பற்றி......

'அம்மான்'

சிங்கள இனவாத அரசாங்கங்களினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவந்த அடக்குமுறைகளுக்கெதிராக அகிம்சை வழியில் போராடி தோல்வி கண்ட தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தினூடாக எமது போராட்டமானது முன்னெடுக்கப்பட வேண்டுமென்ற என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். ஆரம்பத்திலே எமக்கெதிரான தேசிய ஒடுக்குமுறையின் கொடூரத்தைப் பொறுக்க முடியாமல் அவற்றை எதிர்க்க வேண்டுமென்ற உந்துதலில் எமது இளைஞர்கள் ஆயுதமேந்தினார்களேயன்றி மார்க்சிச சித்தாந்தத்தைப் படித்து அவ் ஈடுபாடு காரணமாக ஆயுதமேந்தவில்லை. ஆனால் போராட்டமானது பல முனைகளிலும் கூர்மையடைந்து விரிவடையும் போது மார்க்சிச சித்தாந்தங்களோடு தம்மை இணைத்துக் கொண்டனர். இதன் காரணமாக நடைமுறையிலே ஸ்தாபனங்கள் ஒழுங்கமைக்கப்படும் போது சில குறைபாடுகளும் இணைந்து கொண்டன. இக்குறைபாடுகள் காலவோட்டத்திலே செம்மைப்படுத்தப்பட வேண்டியவையாகும்.

எமது போராட்டம் கூர்மையடைந்து பல வழிகளிலும் முனைப்படைந்த போது இதை சிங்கள இனவாத அரசால் எதிர்கொள்ள முடியாதிருந்தது. அரசின் சிவில் நிர்வாகங்கள் யாவும் செயலிழந்தன. கருங்கக்கூறின் அரசின் செயற்பாடுகள் தமிழ்ப்பகுதிகளில் தடைப்பட்டன. அரசானது ஆயுதப் படையினரின் செயற்பாடு காரணமாகவே தமிழ்ப் பகுதிகளில் உயிர் வாழவேண்டியுள்ளது. தொடர்ச்சியாக போராளிகளினால் பல முனைகளிலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் ஊடாக அரசு தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கு கால அவகாசம் வேண்டி போர் நிறுத்தத்தினை இந்திய அரசின் உதவியுடன் அமுலுக்கு கொண்டு வந்துள்ளது.

இக் கால கட்டத்தில் அரசின் நிர்வாகச் செயலிழப்புகள் எமது மக்களைப் பாதிப்பனவாக அமைந்துள்ளன. எனவே இதற்கான ஓர் மாற்றுத் தீர்வு ஒன்றினை முன்வைக்க வேண்டிய கடமை ஒன்று போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் விடுதலை ஸ்தாபனங்களுக்கு உண்டு. நீதித்துறை, உணவு விநியோகம், எரிபொருள் விநியோகம், சுகாதார ஒழுங்குகள், போக்குவரத்து வசதிகள், கல்வி ஏற்பாடுகள் போன்றவை ஒழுங்காக இயங்கவேண்டியது அவசியமானதாகும். வர்க்க விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்படும் நாடுகளில் சேவைத்துறையில் ஏற்படும் பாதிப்புகள் போராட்டத்தில் புதிய உத்வேகத்தினை ஏற்படுத்தும். ஆனால் புதிய நாடு ஒன்றினை உருவாக்குவதற்கான தேச விடுதலைப் போராட்டங்களில சேவைத் துறைகள் பாதிக்கப்படும் போது மககள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டு போராட்டத்தில் பின்னடைவினை ஏற்படுத்துவதற்கு வழிகோலும். எனவே இத்தகைய பின்னடைவினை ஏற்படுத்துவதற்கு விடுதலை ஸ்தாபனங்கள் காரணமாக அமைவது கவலைக்குரியதும் கண்டனத்துக்குரியதும உடனடியாக நிறுத்தப்பட வேண்டியதுமான ஒன்றாகும்.

போராட்டமானது விரிவடையும் போது தவிர்க்க இயலாதவாறு சேவைத் துறைகள் பாதிப்படையும போது ஓர் மாற்றுத் தீர்வு அவசியமாகின்றது. இத்தகைய மாற்றுத்தீர்வுகள் பொது மக்கள் போராட்டத்தில் பங்காளிகளாககி அவர்களைப் போராடடத்துடன் இணைக்கக் கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்படல் அவசியமானதாகும். சாதி, மத, முதலாளி, தொழிலாளி, ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடுகளற்ற ஒரு சமதர்ம தமிழீழத்தை உருவாக்குவதற்காகப் போராடும் நாம் சோசலிசத் தன்மை கொண்ட மக்கள் அமைப்புகளுக் கூடாக இத்தகைய மாற்றுத் தீர்வுகளை முன்வைத்தல் அத்தியாவசியமானதாகும். ஏனெனில் மக்கள் எவ்வளவு தான் சோசலிசத்தை விரும்பினாலும் சோச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசத்தன்மை கொண்ட ஸ்தாபனங்களினூடாக அவர்கள் ஸ்தாபனமயப்பட்டிருக்காவிடின் சோசலிசத்தை உருவாக்குவது சிரமமாகவே அமையும். இதற்கு சிலி நாட்டின் ஜனாதிபதி Dr. அலண்டே நல்ல உதாரணமாக அமைகிறார். சிலியில் ஜனாதிபதியும் மக்களும் சோசலிசத்தை விரும்பிய போதிலும் மக்கள் ஸ்தாபனமயப்பட்டிருக்காததன் காரணமாக அலண்டே இலகுவாக முறியடிக்கப்பட்டார். இன்று எமது மக்கள் அரசின் நிர்வாகச் செயலிழப்பு காரணமாக ஏற்படுகின்ற தங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு போராளிகளை நாடுகின்றனர். இப்பொறுப்பு போராளிகளினால் மக்களோடு இணைந்த முறையில் அணுகப்படாமல் தனித்த முறையில் அணுகப்படும் போது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன; இவற்றினால் ஏற்படும் முரண்பாடுகளை ஆயுத முனையில் தீர்த்துக் கொள்ள முனையும் போது போராளிகளுக்கும் மக்களுக்குமிடையே இடைவெளி விரிசலடைகின்றது. இப்பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கும் போராளிகள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமையினைக் குறைத்துக் கொள்வதற்கும் மக்களை ஸ்தாபனமயப்படுத்தி அவர்களிடம் இப்பொறுப்புக்களை ஒப்படைத்தல் சிறந்த தீர்வாக அமையும்.

ஆனால் மக்களை எவ்வாறு ஸ்தாபனமயப்படுத்துவது? இவ்வேலை யாரால் செய்யப்பட வேண்டும்? போன்ற பிரச்சினைகள் எழுகின்றன. விடுதலையை முன்னெடுக்கும் விடுதலை ஸ்தாபனங்கள் இவ்வேலையினை செய்வது வரவேற்கப்பட வேண்டியதாகும். ஆனால் தமிழ்ப் பகுதியில் உள்ள ஒவ்வொரு விடுதலை ஸ்தாபனமும் தனித்தனியாக ஸ்தாபனமயப்படுத்தும் வேலைகளில் ஈடுபடுமாயின் மீண்டும் மக்கள் கூறுபோடப்படுவார்கள். மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படும் ஸ்தாபனமயப்படுத்தும் முயற்சி இவ்வாறு அணுகப்படுமாயின் மக்களின் பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கும். எனவே விடுதலை ஸ்தாபனங்கள் கூட்டாக இணைந்து ஒரு கூட்டு வேலைத் திட்டத்தின் ஊடாக இவ்வேலையில் ஈடுபடுமாக இருப்பின் அது வெற்றியை அளிக்கக் கூடியதாக இருக்கும்.

விடுதலை ஸ்தாபனங்கள் இந்நடவடிக்கைகளில் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக ஈடுபடாது இருப்பதனால் மக்கள் தாங்களாகவே தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அமைப்புக்களை உருவாக்கி வருவதனை நடைமுறையில் காணக்கூடியதாக இருக்கின்றது. இவை வெகுசன அமைப்புகளாக இயங்கி வருகின்றன. இப்படிப்பட்ட அமைப்புகள் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி சிறிது ஆராயலாம்.

இன்று தமிழ்ப் பகுதிகளில் வாழும் மக்கள் ஏதாவது ஒரு விடுதலை ஸ்தாபனத்தின் உறுப்பினராகவோ அல்லது உதவியாளராகவோ அல்லது ஆதாரவாளராகவோ உள்ள யதார்த்த நிலையினை புரிந்து கொண்டு இவ் அமைப்புகள் அமைக்கப்பட வேண்டும். ஆதலால் விடுதலை ஸ்தாபனம் சார்ந்தவர்கள் இவ் அமைப்புகளில் அங்கம் வகிக்கமுடியாது என்ற நிலைப்பாடு யதார்த்தத்திற்கு ஒவ்வாததாகும். மக்கள் அமைப்புகள் தனித்துவமாகச் செயற்படுதல் என்பது எந்தவொரு விடுதலை ஸ்தாபனத்தையும் சாராதவர்களை மட்டும் கொண்டு செயற்படுதல் எனும் கருத்தினைக் கொண்டிருக்க முடியாது. விடுதலைத் ஸ்தாபனங்களைச் சார்ந்தவர்கள் விடுதலைத் ஸ்தாபனங்களின் பிரதிநிதியாகச் செயற்படாமல் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் வெகுசன அமைப்புகளில் வேலை செய்ய விரும்பின் அதனை ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்திலே வெகுசன அமைப்புகள் அமைக்கப்பட வேண்டும் மக்கள் பொதுப் பிரச்சினைகளையும் விசேட பிரச்சினைகளையும் கொண்டுள்ளனர். உதாரணமாக பொலிஸ் துறை, நீதித்துறை செயலிழந்ததன் காரணமாக சகல மக்களுக்கும் பிரச்சினை உள்ளது. இது சகல மக்களுக்குமுரிய பொதுப் பிரச்சினைகளாகும். இவற்றிற்கு கிராமிய ரீதியில் சகல மக்களையும் உள்ளடக்கிய விதத்தில் மக்கள் அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். மக்களால் மக்களைக் கொண்ட ஒரு சபையினை சோசலிசத் தன்மை கொண்டதாக உருவாக்குவதன் மூலம் மக்கள் நீதி சார்ந்த பிரச்சினைகளையும் பொதுவான பொருளாதாரப் பிரச்சி

(13ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசமெனும் தகமை
# ஐதீகங்களும் யதார்த்தங்களும்

மே 15, யூன் 1, 15, யூலை 1 ம் திகதி லங்கா கார்டியன் இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளின் தமிழாக்கத்தின் சென்ற இதழின் தொடர்ச்சி.

ஐதீகம் 9

சிங்கள மக்கள் எந்தப் பிரச்சினையினால் பாதிப்புக்குள்ளாகிறார்களோ அதே பிரச்சினையினால் தான் தமிழ் மக்களும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். (அதாவது பொருளாதாரத் தேக்கம்) ஆகவே அவர்கள் தேசிய அனுதாபத்தைப் பாவித்து தனிநாடு கோரக்கூடாது.

ஏகாதிபத்திய வாதத்தால் உருவாக்கப்பட்ட, உலகளாவிய பொருளாதார நெருக்கடியால் உக்கிரமாக்கப்பட்ட பொருளாதாரக் குறைவிருத்தி நிலைமையால் சிங்கள மக்களும் தமிழ் மக்களும், பாதிப்புறுவது உண்மையே; ஆனால் கைத்தொழில் மயமாக்கப்பட்ட மேற்கத்தைய நாடுகள் நெருக்கடியின் சுமையினை சிறீலங்கா போன்ற சார்பு நிலை நாடுகளுக்கு சுமத்திவிடுகின்றனவோ அதே போல் இந்நாட்டு ஆளும் தேசிய இனத்தின் பூர்சுவா வர்க்கம் நெருக்கடியை தம் சொந்த மக்களின் மேலும் ஒடுக்கப்பட்ட தமிழ் இனத்தின் மேலும் சுமத்திவிடுகின்றன. தேர்தல் ரீதியான அரசியல் போன்ற பல காரணங்களால் பெரும்பாலான பங்கு சுமை தமிழ் இனத்தின் மீது சுமத்தப்படுகின்றது. முதலாளித்துவத்தின் பொருளாதார நெருக்கடி உலகளாவிய பிரச்சினை, தேசிய ரீதியாக பெருக (அதாவது மேலதிக சேமிப்பின் நெருக்கடி பெருக) தமிழ் மக்கள் கூடுதலாக மட்டுப்படுத்தப்படுகின்றார்கள். மலேசிய அறிஞர் எஸ். எச். லீ (S. H. Lee) "சிறீலங்காவின் கிராமிய வறுமை என்னும் தனது ஆய்வில் 1963-73 காலத்தில் தமிழரின் உண்மைத்தலா தனி மனித மெய்வருமானம் 28 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதைச் சுட்டிக் காட்டுகிறார்.

ஐதீகம் 10

"தமிழ் மக்கள் தம் தேசிய உரிமைகளை இப்போ இயங்கும் சமூக பொருளாதார அமைப்பினுள்ளேயே வென்றெடுக்கலாம். அவர்களது போராட்டம் இப்போதைய சமூக பொருளாதார அமைப்பை கவிழ்ப்பது அல்ல; அவ்வாறு இருக்கவும் கூடாது. ஆகவே மார்க்சிய தத்துவத்துடன் அல்லது சிங்கள முற்போக்கு வாத இடதுசாரிகளுடன் மிகக் குறைந்தளவு தொடர்பையே கொண்டிருக்க வேண்டும்."

இக் கருத்தையே தமிழ் இளைஞரின் அரசியல் முற்போக்குவாதத்தை எதிர்க்கும் முதலாளித்துவ அமைப்பிற்குக் கட்டுண்ட தமிழ் வர்த்தக உத்தியோக வகுப்பினரும் தமிழ் அரசியல் வாதிகளும் கொண்டுள்ளனர். இதனால் இவர்கள் பாராளுமன்ற ரீதியான போராட்டத்தையும் சிங்கள பூர்சுவா கட்சிகளுடன் கலந்துரையாடல்களையும் நாடுகின்றனரேயொழிய, இடதுசாரி இயக்கத்தினை வெறுக்கின்றனர். அவர்கள் உணராதிருப்பது என்னவென்றால் பூர்சுவா அரசியல் எங்கு நிலவுகின்றதோ, அரசு எங்கு தனிச் சொத்தில் கட்டப்பட்டிருக்கிறதோ அந்த அரசின் அத்திவாரமோ தேசிய ரீதியான முரண்பாடுகளையும், போராட்டங்களையும் ஊட்டி வளர்க்கும் என்பதைத்தான். பூர்சுவா ஜனநாயகவாதிகள் தேசிய உரிமைகளை வழங்குவதுடன் சுரண்டல் அமைப்பையும் இணைத்து தேசிய முரண்பாடுகளைத் தீர்க்க பல தசாப்தங்களாக முயன்றுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளனர்; "ஆனால் பல்தேசிய பூர்சுவா அரசின் அவலம் என்னவெனில் அது இம் முரண்பாடுகளைத் தீர்க்க முடியாமை ஆகும். தேசிய இனங்களை சமத்துவப் படுத்தி தேசிய சிறுபான்மையினரை பாதுகாத்து அதே நேரம் தனிச்சொத்தையும் வர்க்க ஏற்றத் தாழ்வையும் பேணும் முயற்சி தோல்வியிலேயே முடியும். தேசிய முரண்பாடுகள் மேலும் உக்கிரம் அடையும்" (ஸ்ராலின்)

ஆகவே பூர்சுவா சமூகம் தேசிய இனப் பிரச்சினையை தீர்க்க வல்லமையற்றது என்பதை நிரூபித்திருப்பதால், (அத்துடன் தேசிய ஒடுக்குமுறை இன்றி முதலாளித்துவம் என்பது கற்பனை செய்ய முடியாத ஒன்று) தீர்வுக்கான ஓரே வழி முதலாளித்துவத்தை இல்லாதொழித்து, உற்பத்திக் காரணிகளையும் சாதனங்களையும் கூட்டுரிமைக்குட்படுத்தலே. ஆகவே தேசியப் பிரச்சினைக்கும் மூலதனத்தின் ஆதிக்கத்திற்கும், முதலாளித்துவத்தை வீழ்த்துதல், ஏகாதிபத்தியவாதத்தை நிராகரித்தல், அதிகாரத்தை உழைக்கும் வர்க்கத்திற்கு கையளித்து பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தை ஏற்படுத்தல் என்பவற்றிற்கிடையே அமைப்பு ரீதியான தொடர்பு உண்டு.

ஐதீகம் 11

"தனிநாட்டிற்கான கோரிக்கை தமிழ் பூர்சுவாக்களின் கோரிக்கை. எனவே இது பிற்போக்கானது எனவே எதிர்க்கப்பட வேண்டும்."

லெனினிஸம் ஒடுக்கும் தேசிய இனத்தின் பூர்சுவா தேசியவாதத்திற்கும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பூர்சுவா தேசிய வாதத்திற்கும் ஓர் அடிப்படை வேறுபாட்டைக் காட்டுகிறது முன்னையது பிற்போக்கானது ஆனால் பின்னையது பெரும்பாலும் முற்போக்கானது "ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின பூர்சுவாக்கள் ஒடுக்குவோரை எதிர்க்கும் ஒவ்வொரு நிகழ்விலும் வேறு எவரையும் விட நாம் அவர்களை வன்மையாக ஆதரிக்கிறோம். ஏனெனில் நாமே ஒடுக்குமுறைக்கு எதிரான மிகத் திடமுள்ள நிலைப்பேறுள்ள எதிரிகள்...... ..ஒடுக்கப்பட்ட எந்தத் தேசிய இனமாயினும் அதன் பூர்சுவா தேசியவாதத்தில் இருக்கும் அந்தப் பொதுவான ஜனநாயகத்தை நாம் எதுவித கட்டுப்பாடுகளுமின்றி ஆதரிக்கிறோம்." (லெனினின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை.)

மேற்காணப்படும் கருத்து ரோசா லக்சும் பேர்க் (பின்னர் புக்காரின், பிரயோபிராசென்ஸ்கி Bukhari and Perobrazhensky) ஆகியோரின் கருத்துக்கு எதிரானது. ரோசாவின் கருத்துப்படி, சுயநிர்ணய உரிமைக்கான ஆதரவு பூர்சுவா தேசியவாதத்திற்கும் ஆதரவாக இருக்குமாகையால் மார்க்சிய வாதிகள் இதிலிருந்து விலகியிருக்க வேண்டும் ஏனெனில், ஒவ்வொரு தேசிய இனத்தினிலும் நிலவும் வர்க்கங்களிடையேயும் முரணான நலன்கள் இருக்கும். (ரோசா லக்சும் பேர்க்கின் "தேசிய இனப் பிரச்சினையும் சுயாட்சியும்") லெனினைப் பொறுத்தவரை துருக்கி, இந்தியா, பேர்சியா, சீனா, அயர்லாந்து, கொரியா ஆகிய நாடுகளின் தேசியவாத இயக்கங்களின் தலைமை பூர்சுவா அல்லது குட்டி பூர்சுவா தலைமையைக் கொண்டிருந்தது என்ற உண்மை அப்போராட்டங்களுக்கு மார்க்சியவாதிகள் ஆதரவு அளிக்கக் கூடாதென எவ்விதத்திலும் புலப்படுத்தவில்லை. அதே போல் தென்மேல் ஆபிரிக்க விடுதலை இயக்கம் (SWAPO) பலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO), மோரோ விடுதலை முன்னணி, ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆகியவற்றின் தலைமையின குட்டிபூர்சுவா இயல்பு இந் நாட்டு முற்போக்குவாதிகள் அவ்வியக்கங்களை ஆதரிப்பதற்கு தடையாயில்லை ஆனால் இதே இடதுசாரிகள் (இவர்களிற் சிலர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைக் கூட முற்போக்கெனக் கருதுகின்றனர்) தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை மாத்திரம் அது மாக்சிவாதமற்ற பாட்டாளிகளின் உரிமையற்ற ஒரு கட்சி என்ற குற்றச்சாட்டின் பேரில் இடைவிடாது பகைமை பாராட்டுகிறார்கள்.

ஐதீகம் 12

ஈழத்திற்கான போராட்டம் பிரதானமாக தமிழ் பூர்சுவாக்களுக்கும் சிங்கள பூர்சுவாக்களுக்கும் இடையிலான ஒரு பூசல் எனவே இவ்விரு வர்க்கங்களுக்கிடையிலான போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலிருந்து இடது சாரிகள் விலகியிருக்க வேண்டும்.

உண்மையில் இவ்விரு பூர்சுவா வர்க்கங்களுக்கிடையான போராட்டம் இடம் பெற்றாலும் தேசிய பிரச்சினையின் அடிப்படைப் போராட்டம் இதல்ல. சென்றகால ஐரோப்பாவின் நிலையைப் போலல்லாது, இங்கு தேசியப் பிரச்சினை அடிப்படையில் இது வளரும் முதலாளித்துவ வர்க்கங்களுக்கிடையேயான பிரச்சினை மட்டுமல்ல. ஆனால் வடக்கின் தேசிய இயக்கத்தின் சாராம்சம் என்னவென்றால், படித்த மத்திய வகுப்பு வாலிபரைத் தலைமையாகக் கொண்டு ஒடுக்கப்பட்ட எல்லா வர்க்கங்களுமே சிங்கள பூர்சுவாக்களுக்கெதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றன. ஆனால் நகரம் வாழ் (மேல் நோக்கி வளர்ச்சி தடுக்கப்பட்ட) தமிழ் பூர்சுவாக்கள் பிரிவினையை எதிர்த்து ஐ. தே. க யுடன் சமரச உடன்பாடுகள் மூலம் தீர்வுகள் காண முயல்கின்றது. இதனால் இது நிலைபரமற்ற முரண்பாடுகள் நிறைந்த அரசியலை சிங்கள பூர்சுவா அரசாங்கங்களுடன் நடத்துகிறது.

ஐதீகம் 18

"தமிழர் தம் பிரச்சினையை வகுப்புவாத ரீதியிலே அணுகுகிறார்களேயன்றி வர்க்க ரீதியான முறையில் அணுகவில்லை, எனவே அவர்களுடைய கோரிக்கைகள் நிராகரிக்கப்பட வேண்டும்."

உண்மை, வடக்கிலிருக்கும் தேசிய இயக்கங்களிடையே "தமிழன்" என்ற உணர்வு வர்க்க ரீதியான உணர்விலும் வலுவானதாகவும் முதன்மை பெற்றதாகவும் காணப்படுகிறது. ஆனால் இது இயற்கையான தொன்று; ஏனெனில் அவர்களின் முக்கிய முரண்பாடு ஆளும் தேசிய இனத்தின் (சிங்களவரின்) பூர்சுவாக்களுடனும் அவர்களது அரச இயந்திரத்துடனும் என்பதாலேயே. தமிழரின் கண்களில் சிங்கள அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் மங்கியுள்ளமை ஒரு உண்மை. ஆனால் சிங்கள இடதுசாரிகளின் கடமை என்னவெனில் தமிழரின் முழு அனுபவங்களை விளங்கிக்கொண்டு தேசியரீதியான உணர்விலிருந்து வர்க்கரீதியான உணர்வை உருவாக்க உழைப்பதே. தேசிய சுயநிர்ணய உரிமையை ஒரு ஆரம்ப கட்டமாகக் கொண்டால் தான் வர்க்கரீதியான ஒற்றுமை சாத்தியமாகும். சிங்கள தமிழ் மார்க்ஸிஸ்டுகள் தமிழ் மக்களின் தேசிய உணர்வை உதாசீனம் செய்வது ஒரு இயலாதகாரியம். தேசிய உணர்வினூடாக வர்க்கரீதியான உணர்வு வளர இடமுண்டு. (அதாவது போராட்டம் வளரும் பொழுது); ஆனால் வர்க்க ரீதியான உணர்வு செயற்கையாக ஒருநேரடி நேர்கோட்டு முறையில் உருவாக்கப்பட முடியாது,

மேலும், தமிழ் மக்கள் வகுப்புவாத ரீதியான உணர்வைக் கொண்டிருப்பதும் அடிக்கடி விசித்திரமான பழமைவாத வாக்குவாதங்களில் ஈடுபடுவதும் ஆச்சரியத்திற்குரியதல்ல. இத்தகைய குட்டி பூர்சுவாக்களையும் பின்தங்கிய தொழிலாளர்களையும் அடக்கிய வேற்றுமைகளும், முரண்பாடுகளும். வித்தியாசங்களும் அடங்கிய ஒரு பகுதி தவிர்க்கமுடியாத வகையில் எடுகோள்களையும் பிற்போக்குவாத எண்ணங்களையும் பலவீனங்களையும் பிழைகளையும் கொண்டிருக்கும் என லெனின் காட்டியுள்ளார். ஆனால் இடதுசாரிகள் இத்தகைய இயக்கங்களுக்கு அப்பால் வெளியே நிற்காது, இவ் இயக்கங்களை சரியான பாதையில் வழி நடத்திச் செல்லவேண்டும். ஐரிஸ் (அயர்லாந்திய) போராட்டத்தின் பலமான சமய தொடர்புகள் மார்க்ஸையும் லெனினையும் இப்போராட்டத்தில் பங்கு பெறுவதிலிருந்து எவ்விதத்திலும் தடுக்கவில்லை. (லெனின் "அயர்லாந்தின் 1916-ல் எழுச்சி-சுயநிர்ணய உரிமை பற்றிய ஆராய்வின் சுருக்கமான தொகுப்பு" என்றதைப் பார்க்க ஆனால் ரோசா லக்சம் போக தேசிய இயக்கங்களின் பழமைவாத குட்டி பூர்சுவா ரீதியான, பிற்போக்குவாத தன்மைகளை கவனித்தாரேயொழிய, அவற்றின் பன்முகப்பட்ட தன்மைகளையும், இருவகைத் தன்மைகளையும், பாட்டாளிகளுடன் ஒத்துழைக்கக்கூடிய புரட்சிகர தன்மைகளையும் உணரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐதிகம் 14

"பலாத்காரமாக இயங்கும் தமிழ் தீவிர வாத தேசியவாதிகள் இடதுசாரி இயக்கங்களுக்கு எதிரானவர்களாக இருப்பதால், இவர்கள் பிற்போக்குவாதிகள். எனவே இவர்கள் எதிர்க்கப்படவேண்டும்.

தமிழ்த் தீவிரவாதிகள் சோஷலிசத்திற்கு எதிரானவர்கள் அல்ல. இவர்கள் தேசிய பிரச்சினையைப் பற்றிய மாக்சிய—லெனினிய கண்ணோட்டத்தால் ஆழமாக பாதிக்கப்பட்டவர்கள்; அத்துடன் இந்தக் கண்ணோட்டம்தான் இப்பிரச்சினையை விளக்கிக்கொள்ள தேவையான கருத்து ரீதியான விளக்கமுறையைக் கொண்டிருக்கிறது என ஏற்றுக்கொள்பவர்கள். இவர்களுடைய முக்கிய குற்றச்சாட்டு என்னவெனில், கிட்டத்தட்ட முழு இடதுசாரி இயக்கமுமே மாக்சிய கண்ணோட்டத்திற்கு எதிரான ஒரு நிலையை எடுத்துவிட்டது என்பதே ஆகவே தீவிரவாத தமிழர் மார்க்சியத்தை கைவிடவில்லை. ஆனால் எமது மார்க்சிஸ்டுகள் அடிப்படை மார்க்சிய தத்துவமான பாட்டாளிகளின் சர்வதேசவாதத்தை கைவிட்டு விட்டனர்! ஆனால் இடதுசாரிகள் சர்வதேசவாதத்தை கைக்கொண்ட பல முக்கிய சந்தர்ப்பங்களை தமிழ் தீவிரவாதிகள் சுட்டிக்காட்டுவது உண்டு. உதாரணமாக கொம்யூனிஸ்ட் கட்சி 1947-ல், ஒப்பீட்டு ரீதியில் அக்காலத்துக்கு பொருத்தமான கொள்கையாக, தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்ததோடு பிராந்திய சுயாட்சியையும் பிரேரித்தமை, ல. ச. ச. கட்சி 1956-ல் 'சிங்களம் மட்டும்' கொள்கையை தீவிரமாக எதிர்த்தமை; 1958-ல் சிங்கள பாட்டாளிகள் தமிழருக்கு அளித்த தீவிரமான பாதுகாப்பு; 1960-ல் சாதிப் பிரச்சினைகளில் கொம்யூனிஸ்ட் கட்சியின் (பீக்கிங் கிளை) ஈடுபாடு; அண்மைக் காலத்தில் தரப்படுத்தலுக்கு எதிராக புரட்சிகரமான இடதுசாரிகளும் இலங்கை ஆசிரியர் சங்கமும் எடுத்த நடவடிக்கைகள் ஆகியன சகோதரத்துவ ஆதரவாக நோக்கப்படுகின்றன, எடுத்துப் பேசப்படுகின்றன.

ஆனால் 1964-ன் பின் ல. ச. ச. கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் எடுத்த கொள்கைகளும் நடைமுறைகளும், அதன் "மசால வடை" போக்கும், 1966 தை 6-ம் நாள் சம்பவம், கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வாவின் 1972-ம் ஆண்டு அரசியல் யாப்பு, 1971 கிளர்ச்சியை அடக்குவதில் ல. ச. ச. கட்சிக்கும் கொம்யூனிஸ்ட் கட்சிக்கும் இருந்த தொடர்பு; 1972-லிருந்து தொடர்ந்து நடைபெறும் தமிழ் இளைஞருக்கெதிரான கைது, துன்புறுத்தல், சூடு என்பவற்றின் போதும் காடைத்தனமும் சூட்டு சம்பவங்களும் நடைபெற்ற போதும் இடதுசாரிகளின் அமைதி; போன்ற செயற்பாடுகள் இடதுசாரிகள் சர்வதேசியவாதத்தை கைவிட்டமையின் வெளிப்பாடு என தமிழ்த் தீவிரவாதிகளால் கருதப்படுகின்றது.

இடதுசாரிகளின் ஒரு பக்கச் சார்பான மாறுபாடுகள் பழம் இடதுசாரியின் பாராளுமன்ற ரீதியான பிரிவுகளை ஒத்தது என தமிழ்த் தீவிரவாதிகள் கருதுகின்றனர். புதிய இடதுசாரிகள் கூட கண்டிப்பிற்கு தப்பியவர்கள் அல்ல. றோகண விஜேவீரவின், தோட்டத் தொழிலாளருக்கு எதிரான இனவாதம் இன்னும் மறக்கவோ மன்னிக்கவோ படவில்லை. புரட்சிகரமான இடதுசாரிகள் தமிழரின் போராட்டத்தில் ஒத்துழைக்கவோ சமூக பக்கச் சார்பான உணர்ச்சிகளை தீவிரமாக எதிர்க்கவோ, இடையறாது மறுத்தமையும் பெரும் மனவருத்தத்திற்குரிய காரியம்.

தீவிரவாத தமிழ் இளைஞரின் சோஷலிச போக்குத்தான் த. ஐ. வி. கூட்டணியின் தலைமை ஒரு சுதந்திர, இறைமையுள்ள சமய சார்பற்ற, சோஷலிச தமிழ் ஈழத்தை முன்வைக்கத்தூண்டியது(த. ஐ. வி. கூ.(T.U.L.F) தலைமை இக் கோரிக்கைக்கு மிக மேல்வாரியாக ஈடுபாடுடையது என்பது மறுக்கமுடியாது). அத்துடன் த. ஐ. வி. கூ தன் கொள்கையினை "விஞ்ஞான ரீதியான சோஷலிசம்" என்று அறிவிக்க வேண்டியிருந்ததோடு ஐ. தே. கட்சி அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகளுக்கெதிரான பாராளுமன்ற விவாதங்களில் முதலாளித்துவத்திற்கெதிரான நிலையை எடுக்க வேண்டியுமிருந்துள்ளது. த. ஐ. வி. கூ. தலைவர்கள் கியூபாவினதும் வியட்னாமினதும் சர்வதேசவாதத்தைப் புகழ்வதோடு சோவியத் ருசியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியப் பிரச்சினைக்குக் கண்ட தீர்வினைப் பற்றி அனுதாபத்துடன் பேசுவதும் உண்டு இவையெல்லாம் பழைய தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் பழமைவாத ஆங்கிலேய சார்புள்ள போக்கிலிருந்து வெகுதூரமானவையன்றோ! வெளிநாடுகள் பற்றியான திட்டங்களிலும் கொள்கைகளிலும் த. ஐ. வி. கூயின் முற்போக்குவாதம் கூட, விஞ்ஞான ரீதியான சோஷலிசப் போக்கைக் கொண்ட தீவிரவாத தமிழ் இளைஞரின் பிரதிபலிப்பின் வெளிப்பாடே மாணவரினதும் இளைஞரினதும் இயக்கங்கள் வடக்கின் தேசிய போராட்டத்தில் வர வர கூடுதலான இடத்தை வகிக்க, பாராளுமன்ற உடன்பாடு ரீதியான பாதை வளர்ச்சியடைய, இதனால் இப் போராட்டம் பாராமன்றக்கிற்கு வெளியான நேரடி நடவடிக்கை என்ற வடிவத்தைப் பெற, இந்த அரசியல் தத்துவார்த்த ரீதியான தீவிரப்படுத்தும் போக்கு உத்வேகத்தைப் பெறும். (வாசிக்குக: லங்கா கார்டியன் மார்ச்) த. ஐ. வி. கூயின் சங்கடம் "பகிஷ்கரிப்புக்குப்பின்"; லங்கா ஏப்ரல் 1: "யாழ்ப்பாணம்; வீதிகளில் அமைதி.")

(தொடரும்)

## மக்கள் அமைப்புக்கள் . . ,

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

னைகளையும், சமூகப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ள முடியும். ஆனால் கிராமிய ரீதியில் உருவாக்கப்படும் இத்தகைய அமைப்புக்கள் அவற்றிக்கிடையே தொடர்புகளைக் கொண்டு தேவையேற்படின் இணைந்து செயற்படக் கூடிய விதத்தில் மையப்படுத்தப்படுதல் அவசியமானதாகும்.

மக்கள் தொழில் ரீதியாக விசேட பிரச்சினைகளையும் கொண்டுள்ளனர் உதாரணமாக மீனவர்கள், வறிய கூலி விவசாயிகள், மத்தியதர விவசாயிகள், சிவில் தொழிலாளர்கள் ஆகியோர் ஒவ்வொருவரினதும் பிரச்சினைகள் வேறுபட்டவை, தனித்துவமானவை. அவர்கள் தனித்தனியாக ஸ்தாபனமயப்படாது அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவது சாத்தியமற்றதாகும். இங்கும் ஒவ்வொருவரும் தனித்தனியாக தங்களுக்குரிய பிரச்சினைகளின் ஊடாக ஸ்தாபனப்படும் பொழுதும் தனித்துவம் என்ற பெயரில் விடுதலை இயக்கத்தினை சாராதவர்களை மட்டும் கொண்டு செயற்படமுனைதல் யதார்த்தத்திற்கு ஒவ்வாததாகும். இவ்விடயங்களை கருத்திற் கொண்டு மக்கள் அமைப்புக்கள் ஒழுங்கமைக்கப்படபட வேண்டும்.

இவ்வாறு உருவாக்கப்படும் அமைப்புக்கள் போராட்டத்தை முன் நோக்கிக் கொண்டு செல்வதற்கு உறுதுணையாக அமையவேண்டும். இம்மக்கள் அமைப்புக்களை தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைத்துக் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு விடுதலையினை முன்னெடுத்துச் செல்கின்ற விடுதலைக் ஸ்தாபனங்களிடம் உள்ளது. எனவே விடுதலை ஸ்தாபனங்கள் இம்மக்கள் அமைப்புக்களை எக்காரணம் கொண்டு சந்தேகக் கண்ணோடு பார்த்தல் கூடாது இம்மக்கள் அமைப்புகளில் மக்களின் நலன் கருதி, மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சேவையாற்றி சரியான கருத்துக்களை மக்கள் முன்னிலையில் வைத்து செயற்படும் போது இவ்வாறு இயங்குகின்ற விடுதலை ஸ்தாபனம் மக்களால் முழு மனதாக அங்கீகரிக்கப்படும் நிலை உருவாகும். இவ்வாறு செயற்படும் ஸ்தாபனத்தின் தலைமையில மக்கள் போராட்டத்தில் அணிவகுத்து நிற்பார்கள். சரியான முறையில் மக்களை வென்றெடுத்தல் என்பது இவ்வாறு தான் அமையமுடியும்.

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழப் பகுதிகளில் நீர்வளம்

—வாசன்—

எல்லா வகையான இயற்கை வளங்களோடு பார்க்கும் பொழுதும் எங்கும் காணக் கூடிய ஓர் வளமாக நீர் காணப்படுகின்ற பொழுதிலும், மனித வாழ்க்கையைப் பொறுத்த வரையில் இது மிகவும் அரியதும், பெறுமதி மிக்கதுமான ஒரு வளமாகக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் கிடைக்கும் நீரை எல்லா வகையான தேவைக்கும் பயன்படுத்த முடியாதிருப்பதாகும். நீரின்றேல் உயிரினங்கள் வாழ முடியாது. இத்துடன் இதன் பெறுமதியும அளவிட முடியாததாகும.

மனித வாழ்க்கையில் குடிப்பதற்கும், கழுவும் தேவைக்கும், சமைப்பதற்கும், கழிவுப் பொருட்களை வெளியில் தள்ளுவதற்கும், பயிர் செய்கைக்கும், உணவுற்பத்திக்கும், தொழிற்சாலைகளை இயக்குவதற்கும், இன்னும் பல தேவைகளுக்கும் நீர் அத்தியாவசியமான ஒரு வளமாகக் காணப்படுகின்றது. மக்கட் குடியிருப்புகளும், பரம்பலும் இத்தகைய காரணங்களினாற்றான் நீர் வளங்கள் உள்ள பாகங்களை நோக்கி அமைந்தன.

இலங்கையில் தமிழர் வாழும் பாரம்பரிய பகுதிகளின் நீர் வளங்களைப் பற்றி மேலோட்டமாக ஆராய்வது தான் இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழர் வாழும் பிரதேசங்களின் நீர் வளங்களை மதிப்பீடு செய்தலும், கண்டறிதலும் இப்பாகங்களின் பொருளாதார விருத்தியின் ஒரு முன்னோடித் தேவையாகும்.

இவ்வகையில் எமக்கு இயற்கையாகக் கிடைக்கும் நீர் வளங்களை அடிப்படையாக இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
அவையாவன:-

(1) மேற்பரப்பு நீர் மூலாதாரங்கள்

(2) நிலநீர் மூலாதாரங்கள்.

நீர் பெறப்படும் மூலாதாரங்கள் இவ்வகையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்ற போதிலும், இவையிரண்டும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. அதாவது மேற்பரப்பு நீர் மூலாதாரங்களிலிருந்து நிலநீரும், நிலநீர் மூலாதாரங்களிலிருந்து குளங்கள் போன்ற நீர்நிலைகளும் பெறுவதுண்டு.

நிலநீர் வளங்கள் அமைவதற்கு பாறையமைப்பில் சில சிறப்பியல்புகள் இருக்க வேண்டும். அதாவது எல்லா வகையான பாறைப் படைகளிலும் நிலநீர்த் தேக்கங்கள் காணப்படமாட்டா. இவ்வளவில் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பாகங்களில் சில குறித்த பகுதிகளிலேயே நிலநீர்த் தேக்கங்கள் அமைவதற்கேற்ற வாய்ப்பான பாறையமைப்புக் காணப்படுகின்றது.
அவையாவன:-

(1) யாழ்ப்பாணக் குடாநாடும் தீவுகளும்.

(2) புத்தளம்—வனத்தவில்லு பிரதேசம்.

(3) மன்னார்—பூநகரி வலயம்.

(4) பரந்தன்—முல்லைத்தீவு வலயம்.

மேற்குறித்த வலயங்களைத் தவிர தமிழர் வாழும் ஏனைய பிரதேசங்களில் நிலநீர் மூலாதாரங்கள் காணப்படுகின்ற போதிலும்,இவற்றின்மூலம் பெருமளவுநீரை பலவிதமான தேவைகளுக்கும் பெறக்கூடியதான புவிச்சரிதவியற் சாத்தியக் கூறுகள் இல்லையென்று தான் கூறவேண்டும். எனினும் இது பற்றிய மேலதிக ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன.

## யாழ்ப்பாணக் குடாநாடு

யாழ்ப்பாணக் குடாநாடும் அதற்கண்மித்தாயுள்ள தீவுக் கூட்டங்களும் நிலநீர்த்தேக்கங்களைப் பொறுத்தவரையில் சாதகமான புவிச்சரிதவியல் அமைப்பைக் கொண்டுள்ளன. மயோசீன் காலத்தில் உருவாகிய இக்குடாநாட்டின் பாறைகள் சுண்ணக்கல் வகையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்தனவாயிருப்பதனால், இவை நீரை உட்கசியச் செய்யக் கூடியனவாயிருக்கின்றன. மழையின் மூலம் கிடைக்கின்ற நீர் இப்பாறைப் படைகளினூடாகக் கீழ் நோக்கிச் சென்று நிலநீர்த் தேக்கமாக அமைகின்றது. சுண்ணக்கல் கரையக்கூடிய தன்மையுடையதாயிருப்பதால் நிலநீர்தேங்குகின்ற குகைகளும் (Aguikrs) படிப்படியாகப் பெருத்து பெருமளவு நீர் தேங்கக் கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் வருடத்தில் மூன்று மாதங்களில் கிடைக்கின்ற ஏறத்தாழ 50'' மழைவீழ்ச்சியின் ஒரு பகுதியே மணற்படையினூடாகவும், சுண்ணாம்புக்கல் படையினூடாகவும் ஊடுவடிந்து நிலநீர்த் தேக்கமாக மாறி யாழ்ப்பாணக் குடாநாட்டின் மக்கள் வாழ்க்கைக்கு உயர் நாடியாகத் திகழ்கின்றது. இந்நீர்தான் கிணறுகளின் மூலம் எடுக்கப்பட்டு பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

வருடத்தில் மூன்று மாதங்களில் கிடைக்கின்ற மழை வீழ்ச்சியின் ஏறத்தாழ அரைவாசிக்கும் குறைந்த பகுதிதான் இவ்வாறு நிலநீராகச் சென்றடைகின்றது. மிகுதியான நீர் ஆவியாக்கமாகவும், ஆவியுயிர்ப்பு இழப்புகளாகவும் ஏற்படுவதுடன் இன்னொரு பகுதி பல்வேறு வாய்க்கால்கள் மூலம் கடலையும் சென்றடைகின்றது. குடாநாட்டின் மேற்பரப்பில் காணப்படுகின்ற குளங்கள் ஒரு சிறு பகுதி நீரைத் தேக்கி வைக்கின்றனவாயினும், மழைக் காலம் முடிந்ததும் இவை மிக விரைவில் வற்றி விடுவதனால் இவற்றினால் ஏற்படும் பயன்பாடு மிகக்குறைவாகும். ஆயினும் நிலநீர்ச் சேமிப்புக்கு நீர் சென்றடைவதற்கேற்ற புனல்கள் போன்று இவை செயற்படுவதனால் இவற்றைத் தூர்ந்திடாது தொடர்ந்து இயங்கும் தன்மையில் வைத்துக் கொள்வது அத்தியாவசியமானதாகும். இவ்வகையில் இவை நிலநீர் சேமிப்புக்கு உதவுகின்றன. இவை தவிர மழைக் காலத்தில் மட்டும் செயற்படும் ஓர் சிறு அருவியாக வழுக்கையாறு காணப்படுகின்றது. இக்குடா நாட்டின் அமைப்பின் காரணமாக நிலநீர் தேக்கத்திலும் சில சிறப்பியல்புகள் காணப்படுகின்றன. குடா நாடு அதன் அமைப்பைப் பொறுத்தவரையில் வடமேற்கு நோக்கி சற்று சரிவடைந்திருப்பதுடன் நிலநீர்த் தேக்கமும் ஓர் வில்லின் அமைப்பை யொத்ததாகவும் நன்னீர்ப் படையின் கீழ் உவர்நீர்த் தோற்றப்பாடும் காணப்படுகின்றது. ஒரு தீவின் அமைப்பில் இக்குடா நாடு காணப்படுவதனாலேயே ஆழவுள்ள கடல்நீர் நன்னீர்ப்படையின் கீழ் அமைந்து காணப்படுகின்றது. வில்லின அமைப்பில் நிலநீர்ப்பீடம் அமைந்திருப்பதனாலேயே குடாநாட்டில் கரையோரப் பாகங்களில் கிணறுகள் ஆழம் குறைந்தவையாகவும் மத்திய, வடமத்திய பகுதிகளில் ஆழம் கூடியதாகவும் காணப்படுகின்றன.

கடந்த காலங்களோடு பார்க்கும் பொழுது சமீபகாலங்களில் இக்குடா நாட்டின் நீர்த் தேவை அதிகரித்து வந்துள்ளமையைக் காணக் கூடியதாயிருக்கின்றது. மக்கள் தொகை அதிகரித்து வருதலையும், பயிர்ச்செய்கை நடவடிக்கைகள், ஏனைய தொழில் முயற்சிகள் அதிகரித்தலையும் நீர்ப்பயன்பாட்டை அதிகரிக்கச் செய்துள்ளன. மேலதிக நிலங்களும் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. எனவே கடந்த காலங்களை விட இன்று குடா நாட்டில் நீர்ப்பயன்பாடு பன்மடங்கு அதிகரித்துள்ளது எனலாம். இதைவிட நீரை வெளியேற்றும் முறைகளிலும் இன்று பல மாற்றங்களேற்பட்டுள்ளன, அதிகளவு நீர்ப்பயன்பாட்டினாலும் நீரைக் கிணறுகளின் மூலம் வெளியேற்றும் முறைகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால் நீர்த்தன்மையில் வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. கடந்த காலங்களில் நம் முன்னோரால் மேற்கொள்ளப்பட்டுவந்த நீரிறைக்கும் முறைகள் கிணற்றில் நீர் ஊறுதற்கேற்பவையாக இருந்தன. துலாமூலமும், மாடுகளைக் கொண்டு இழுக்கும் பல்வேறு சூத்திரங்கள் என அழைக்கப்படும் முறைகள் மூலமும் நீர் வெளியேற்றப்பட்ட பொழுது இது கிணற்றுக்கும், நிலநீர்த்தாங்கிக்கும் தீமை பயப்பதாக இருக்கவில்லை. ஆனால் சமீப காலங்களில் மின்சக்தி மூலம் இயங்கும் பம்பிகள் யாழ்ப்பாணக் குடா நாட்டின் பெரும் பகுதியில் பாவனையில் இருப்பதனால் இவை மூலம் சிறியளவு நேரத்தில் பெருமளவு நீர் வெளியேற்றப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் நன்னீர்ப்படை உறிஞ்சப்பட்டுவிட அதன் கீழ் இருக்கும் உவர்நீர் மேல் நோக்கி எழுந்து கிணறுகளில் ஊடுருவுகின்றது. குடா நாட்டின் நீர்ப்பீடத்தின் தன்மை ஓர் வில் போன்றிருப்பதனால் இத்தகைய உவர் நீர் ஊடுருவல் முதலில் கரையோரப் பகுதிகளையடுத்துள்ள கிணறுகளிலும், உவர்நீர் ஏரிகளையடுத்த பகுதிகளிலுள்ள கிணறுகளிலுமே முதலில் ஏற்படுகின்றது. இந்நிலையினால் காலப் போக்கில் உட்பாகங்களில் உள்ள கிணறுகளும் உவர் நீரைப் பெறுவதற்கு ஏதுவாக இடமுண்டு. அத்துடன் பல பயிர்ச்செய்கை நிலங்களில் நீரை வெளியேற்றும் நேரத்தைப் பொறுத்தும், அதனைக் கிணற்றிலிருந்து பயிர் வரை கொண்டு செல்லும் வாய்க்காலின் தன்மையைப் பொறுத்தும் அதிகளவு நீர் பயிர் வளர்ச்சிக்குப் பயன்படாது ஆவியாக்கத்திற்கு உட்படுவதனைக் காணக் கூடியதாயிருக்கின்றது. இத்தகைய தன்மைகளைப் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்து நீர் வீணாக வீணடிக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலநீர் சம்பந்தமாகச் சமீப காலங்களில் ஏற்பட்டு வருகின்ற இன்னொரு பிரச்சினை நீரில் கலந்துள்ள நைதரசனின் அளவாகும். பயிர்ச் செய்கைப் பகுதிகளில் அளவுக்கு மிஞ்சிய யூரியா போன்ற வளமாக்கிகளின் மேலதிகப் பயன்பாட்டினாலும், அடர்த்தியாக மக்கள் வாழுகின்ற பாகங்களில் நீரடைப்பு மலசலகூடங்களிலிருந்து நிலநீரைச் சென்றடையும் மாசுக்களினாலும் நிலநீரில் ஏனைய மாசுக்களுடன் நைதரசனின் அளவு பெருமளவு அதிகரித்து வருகின்றது. வருங்காலத்தில் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு தோற்றப்பாடாக இது உருவெடுக்கக் கூடும்.

எனவே சில குறித்த கிணறுகளிலிருந்து அளவுக்கு மிஞ்சிய நீரை இயந்திரங்கள் மூலம் வெளியேற்றுவதைக் கட்டுப்படுத்துதல், ஆவியாக்குதலின் மூலம் வீணாகும் நீரைக் குறைத்தல், நீரில் நைதரசனின் கலப்பைக் குறைத்தல், வேறு பல வழிகளில் நீர் அசுத்தமடைவதைத் தடுத்தல், நகரப்பகுதிகளில் குழாய் மூலம் விநியோகிக்கப்படும் நன்னீர் குறித்த பயன்பாட்டுக்காகவல்லாது, வேறு தேவைகளின் மூலம் விரயமாக்கப்படுதலைத் தடுத்தல் என்பன யாழ்ப்பாணக் குடா நாட்டின் நீர் வளங்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி நடவடிக்கைகளாகும். இவை சம்பந்தமாகவும், இவற்றினால் ஏற்படக் கூடிய தீங்குகளின் பலாபலன்களை மக்களுக்கு எடுத்துரைத்து இவற்றின் தீயவிளைவுகள் தடுக்கப்படவேண்டும். வருடத்தில் மூன்று மாதங்களில் கிடைக்கின்ற மழை வீழ்ச்சியினால் நிலத்துக்கடியில் சென்றடையும் நீரை இயன்ற வரையில் சிக்கனமாகவும், தேவைக்கேற்பவும், பகுத்தறிவுடனும் பயன்படுத்துவதின் மூலமே குடாநாட்டில் வருங்காலத்தில் மக்கள் வாழ்க்கையை சுபீட்சமுடையதாகப் பேண முடியும். குடாநாட்டின் உட்பகுதிகளில் இருக்கும் உவர்நீரேரிகளை யாழ்ப்பாணக் கடனீரேரியுடன் இணைத்து நன்னீரேரிகளாக்கும் திட்டத்தினையும் நடைமுறைப்படுத்தினால் குடா நாட்டின் நன்னீர் சேமிப்பு அதிகரிக்க வழிவகை ஏற்படுவதுடன் வருடத்தில் சில மாதங்களுக்காவது இவ் ஏரிகளையும் பல தேவைகளுக்கும் பயன்படுத்த முடியும்.

(தொடரும்)

சிறீலங்காவின் வதை முகாம்களில் வாடிக்கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவாக யாழ் பல்கலைக்கழக மாணவர்களினால் நடாத்தப்பட்ட பாதயாத்திரைக்கு பொது மக்கள் பரவலாக ஆதரவு வழங்கினர். ஒரு வயோதிபத்தாய் பாதயாத்திரையில் வந்தவர்களை அன்புடன் வரவேற்று கண்ணீர்மல்க "உங்களின் போராட்ட நடவடிக்கைகளின் காரணமாகவே நீண்ட நாளைக்குப் பிறகு எனது மகனைச் சந்திக்கக் கூடியதாகவும் அவனுக்கு உடைகள் வழங்கக் கூடியதாகவும் இருந்தது" எனக் கூறினார். ஆம் யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்களின் பலன்களில் இதுவும் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவகாலனித்துவம் - 3

மையநாடுகளின் முதலாளித்துவத்திற்கும் நவகாலனிகளின் முதலாளித்துவ வகுப்பிற்கும் எவ்வித முரண்பாடுகளும் இல்லை என்றும் பொருள் கொள்ளுதல் முடியாது. உழைக்கும் மக்களின் உபரி மதிப்பை தம்மிடையே பங்கிட்டுக்கொள்வதில் இவ்விரு பகுதியினருக்குமிடையே போட்டியும் பூசலும் உள்ளன. ஆனால் இம் முரண்பாடுகளின் அளவும் தீவிரமும் நாட்டுக்கு நாடு வேறுபடும். ஒரு பிரதேசத்திற்கும் இன்னொரு பிரதேசத்திற்குமிடையே வேறுபடும். இம் முரண்பாடுகளின் தீவிரம் பல காரணிகளில் தங்கியுள்ளது. உலக முதலாளித்துவத்துடன் குறித்த நாடு எந்தளவு பிணைக்கப்பட்டுள்ளது, அந்தநாட்டின் முதலாளித்துவ வகுப்பு எந்தளவிற்குச் சுயமாகச் செயற்படுகிறது, அந்நாட்டிலும் குறித்த பிராந்தியத்திலும் வர்க்க உறவுகளின் வளர்ச்சி நிலை ஆகியவை இவற்றுள் சிலவாகும். இந்த முரண்பாடுகளைச் சிலர் குறைத்து மதிப்பிடுவது உண்டு. வேறுசிலர் மிகைப்படுத்திக் கூறுவதுண்டு. இவ்விரு போக்குகளும் தவறானவை. இம்முரண்பாடுகள் ஒரு வர்க்கத்திற்கு உள்ளே எழும் முரண்பாடுகள் (Intra Class Contradictions) ஆகும். இவை இருவேறுவர்க்கங்களிடையே எழும் முரண்பாடுகள் (Inter Class Contradictions) அல்ல. ஆதலால் மூன்றும் உலகின் முதலாளித்துவ வகுப்பினர் சுரண்டப்படுவோர் அல்லர். அவ்விதம் கூறினால் சுரண்டல் என்ற சொல் அர்த்தம் அற்றதாகிவிடும். இம்முரண்பாடுகள் வர்க்கத்திற்கு உள்ளே உள்ளமுரண்பாடுகள் ஆதலால்போராட்டமாகமுடியாது சமரசம் செய்துகொள்ளுதலே இயல்பு. இதற்குமாறாக நவகாலனிகளின் உழைக்கும் பாட்டாளி வகுப்பினருக்கும் அந்நாடுகளின் முதலாளிகளுக்கும், மையநாடுகளின் முதலாளிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் ஆகும். இவை சமரசம் செய்யமுடியாதவை. இந்த முரண்பாடுகளே நவகாலனிகளின் சமூக பொருளியல் அமைப்புக்களின் போக்கை நிர்ணயிக்கும் தீர்மான சக்திகளாக இன்று விளங்குகின்றன. மூன்றும் உலகின் இன்றைய போராட்டம் ஏகபோக மூலதனத்திற்கும் இந்நாடுகளின் தொழிலாளர்கள், விவசாயிகள், நகர்ப்புற ஏழைகள் ஆகியோரிற்கும் இடையிலானதாகும். நவகாலனித்துவத் தங்கியிருத்தல் பொருளியல் அமைப்பை அதன் அடித்தளத்துடன் தகர்ப்பதே இம் முரண்பாடுகளின் தீர்விற்கான வழியாகும். இதற்குப்பதிலாக முதலாளித்துவ வகுப்பினரால் ஏகபோக மூலதனத்திற்கும், நவகாலனித்துவ ஊடுருவலுக்கும் எதிராக போராட்டம் ஒன்றை நடத்துதல் முடியாது. மையநாடுகளின் முதலாளித்துவங்களுடன் போட்டியிடுதலும் இயலாதவிடயம் ஏனெனில் அவற்றின் பொருளியல், தொழில் நுட்ப, நிதிமேலாதிக்கம் பன்மடங்கு உயர்வானது. எந்தவொரு நவகாலனியும் உலக முதலாளித்துவ அமைப்பின் பாதகவிளைவுகளில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவோ அல்லது விலகியிருக்கவோ கூட முடியாது. ஏனெனில் இது தவிர்க்கமுடியாது. நவகாலனியின் உள்ளே நிலவும் பொருளியல் சமூக உறவுகள் மாற்றப்படாதவரை நவகாலனியொன்று உலக முதலாளித்துவத்தின் கோரப்பிடியில் இருந்து தப்பமுடியாது. ஆதலால் உலக முதலாளித்துவ அமைப்பில் இருந்து தன்னை முறித்துக் கொள்ளல் (Breakaway) உள்நாட்டுப் பொருளியல் அமைப்பை மாற்றுவதன் மூலம்தான் சாத்தியமாகும். முதலாளித்துவ அமைப்பை கைவிடுவதன் மூலம்தான் இது சாத்தியமாகும் சோஷலிசப் புரட்சியொன்றே இதற்கான வழி. முதலாளித்துவ வகுப்பிற்கு உள்ள உட்பிரிவுகளில் ஒன்றின் இடத்தை மற்றது பெறுவதால் இப்புரட்சி ஏற்படமுடியாது. அரசாங்கம் மாறுவதால், அல்லது தனிநபர்களான அரசியல்வாதிகளின் மாற்றத்தால் எவ்வித மாறுதல்களும் ஏற்படப்போவதில்லை. இதுமட்டுமல்ல, இது முதலாளித்துவ அமைப்பு முறையை மாற்றுமல் அதற்குள் இயங்கும் இடதுசாரி ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட இவ் விடுதலையைப் பெற்றுத்தருதல் முடியாது. சீர்திருத்தவாதம் நவகாலனித்துவ அமைப்புகளை மேன்மேலும் பலப்படுத்தவே உதவும். புரட்சிகர வாய்ச் சொல் பயன்தராது. அவ்விதம் இல்லாது ஒரு அரசு தான் கூறும் புரட்சிகரத் திட்டங்களை சீர்திருத்த உருவில் செல்ல முனையுமாயின் முதலாளித்துவத்தின் அடக்குமுறை யந்திரம் இரத்தக் களரி ஒன்றை உண்டாக்கி அச் சீர்திருத்தங்களை முறியடிக்கும். சிலி நாட்டின் நிகழ்வுகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள் ஆதலால் தறபோதுள்ள அமைப்புக்களைச் சரிப்படுத்தல், ஒட்டுவேலை செய்தல், சீர்திருத்தம் என்பன நடைமுறைச் சாத்தியமற்ற செயல்களாகும். இருக்கும் அமைப்புகள் புரட்சிகர முறையில் உடைத்தெறியப்படல் வேண்டும். வெங்காயத் தோலைப் படை படையாக உரித்தெறியலாம். சிங்கத்தின் பற்களையும், நகங்களையும் பிடுங்கி எறிய முடியாது. முதலாளித்துவ எதிர்ப்புச் சோஷலிசப் புரட்சியொன்றுதான் நவகாலனித்து அமைப்புகளை உடைத்தெறியவல்லது.

மூக்கண்டங்களின் (Tricontinental World) மார்க்சிய சிந்தனையில் ரெஜிஸ்டெப்ரேயின் (Regis Debray) சிந்தனைகள் மிக முக்கியமானவை. ஒரு நாள் அவை சிறப்பாக போற்றிப் புகழப்படும். ரெஜிஸ் டெப்ரே பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

(மேலாதிக்கம் பெற்றுள்ள வர்க்கம் தனது நலன்களை கட்டிக்காக்கும் வகையில் ஐக்கிய அமெரிக்காவுடன் பிணைபட்டுள்ளது. இந்த வகுப்பை இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் அழித்து ஒழிப்பதுதான் சுதந்திரத்திற்கான வழி? (கஸ்ட்ரே விசம்: லத்தீன் அமெரிக்காவின் நீண்ட பாதை—புரட்சிக்கான திட்டம் என்னும் நூல்)

உலக முதலாளித்துவத்துடன் மூன்றாம் உலக நாடுகள் பிணைக்கப்பட்டதனால் அரசியல் சுதந்திரமும் இறைமையும் பறிபோயின. நவகாலனித்துவ வளர்ச்சியுடன் பொருளியல் ரீதியான இன்னோர் மாற்றமும் உண்டானது ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் முதலாளித்துவத்திற்கு முற்பட்ட பொருளியல் அமைப்புகள் இருந்து வந்தன. காலனித்துவ ஆட்சி இவ்வமைப்புக்களை ஓரளவே மாற்றியது அதே வேளை இவ்வமைப்புக்களைப் பாதுகாத்து தனது சுரண்டலுக்கு ஏற்றவகையில் உபயோகித்தது நிலமானியம் ஏனைய பிற்பட்ட உற்பத்தி உறவுகள் காலனித்துவ கட்டத்தில் இருந்தமையால் ஒருவகை இரட்டை அமைப்பு (Dualism) நிலவியது. நவகாலனித்துவம் இதைமாற்றி முதலாளித்துவ உற்பத்தி முறையின் மேலாதிக்கத்தை உருவாக்கியுள்ளது. இதனால் முதலாளித்துவத்திற்கு முற்பட்ட உறவுகள் (Pre-Capitalist relations) மறைகின்றன.

நவகாலனித்துவத்தின் கீழ் நிலமானிய உறவுகள் ஒழிந்து மிச்ச சொச்சங்களாகவே உள்ளன. நிலமானிய உறவு போல் தெரியும் சில அம்சங்கள் உள்ளடக்கத்தில் முதலாளித்துவ உறவாகவே இருக்கும். விவசாயத்துறை கூட உலக முதலாளித்துவத்துவத்துடன் இணைக்கப்படுகிறது. உலகச் சந்தைக்காக விவசாய உற்பத்தி மாற்றப்படும். உள்நாட்டு, வெளிநாட்டுச் சந்தைகளுக்கான பண்ட உற்பத்தி விவசாயத்தில் இடம்பெறுகிறது. சிறு உடமையாளனாக இருந்த விவசாயி நிலமற்ற கூலி விவசாயியாக மாறும் பாட்டாளிமயமாதல் (Proletariamsation) விவசாயத்துறையில் ஏற்படும் பாட்டாளிமயமாதல் விவசாயத்துறையில் முதலாளிததுவ ஊடுருவலின் அடையாளம் ஆகும்.

இன்று விவசாய உற்பத்திக்கு வேண்டியன யாவை? இவற்றை பொருளியல் உள்ளீடுகள் (Inputs) என்பர். இரசாயன உரம், களை கொல்லிகள், கிருமி நாசினிகள் டிராக்டர் யந்திரம், பணமுதலீடு என்பன விவசாய உள்ளீடுகள். இவை எங்கிருந்து வருகின்றன? மேற்கு நாடுகளின் பல்தேசியக் கம்பனிகள் இவற்றைக் கொடுத்து கொள்ளை லாபம் பெறுகின்றன. விவசாயததுறையின் உள்ளீடுகள் எப்படி வெளிச்சக்திகளால் கட்டுப்படுத்தப்படுகின்றனவோ அவ்விதமே வெளியீடும் (Output) முதலாளித்துவச் சந்தையால் கட்டுப்படுத்தப்படுகின்றன. பழங்கள், மரக்கறிவகை முதலியன ஏற்றுமதிக்காக உற்பத்தியாகின்றன. விவசாயி இவ்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் முதலாளித்துவ சந்தையுடன் பிணைக்கப்படுகிறுன். 1960 காலப்பகுதியில் புகுத்தப்பட்ட இப் 'பசுமைப்புரட்சி' சுயதேவை பூர்த்தியை அடிப்படையாகக் கொண்ட கிராமிய விவசாயத்தை முதலாளித்துவமயப்படுத்துகிறது.

இத்தகைய மாறுதல்கள் 'இரட்டைப் பொருளியல்' (Dual Economy) என்னும் கருத்தாக்கத்தைக் கேள்விக்குரியதாக்குகிறது. முதலாளித்துவமும் பின்தங்கிய நிலமானியமும் அதற்குமுந்தைய உற்பத்தி உறவுகளும் அருகருகே ஒன்றிணைந்து உள்ள அமைப்பையே இரட்டைப் பொருளியல் குறிப்பிடுகிறது. முதலாளித்துவம் முற்போக்கானது. நிலமானியம் பிற்போக்கானது. தேசிய முதலாளித்துவ சக்திகளுடன் இணைந்து பிற்போக்கு நிலவுடமையாளரையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து போராடி 'தேசிய ஜனநாயக அரசு' (National Democratic State) அமைக்கும்பணி தான் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் வழி என்ற கருத்து 1957—1960 காலத்தில் சோவியத் சீன சிந்தனைகளில் வெளிப்பட்டது ஆனால் இது ஆசியல் வழிமுறை அல்ல என்பதை வரலாறு நிருபித்துள்ளது.

'தேசிய முதலாளித்துவம்' நவகாலனித்துவ கட்டத்தில் எவ்வித 'தேசியத்' தன்மையும் கொண்டதல்ல. விதேசிய மோகமும் அடிமைத்தனமுமே அதன் இயல்புகள் வளர்ச்சி என்ற போர்வையில் நாட்டைச் சுரண்டலுக்கும் சமனற்ற வர்த்தக உறவுக்கும் மேலும்மேலும் இது இட்டுச்செல்லும். விருத்தியென்ற பெயரில் மேலும மேலும் குறைவிருத்தியின் விருத்தி (Development of under-development) நிகழ்கிறது இதை போல் பறன் (Paul Baran) தமது Political Eeonomy of Growth என்ற நூலில் 1957 ல் எடுத்துக் கூறினுர்' 1960க்களில் அண்டரு குண்டர் பிராங் இதை மேலும் தெளிவுபடுத்தி ஒரு கோட்பாடாக வளர்த்தார். மையநாடுகளில் தங்கியிருக்கும் நிலையின் வெளிப்பாடே குறைவிருத்தி. இத்தகைய தங்கியிருத்தலே (Dependency) வளர்ச்சிக் குறைவின் மூலகாரணம்.

முதலாளித்துவ உற்பத்தி முறையின் இயக்குவிதி மூலதனத்திரட்சி (Accumulation) என்பதை மார்க்ஸ் விளக்கியுள்ளார். மூலதனம் ஒருபுறம் குவியக் குவிய மறுபுறம் வறுமை, துன்பம், பாதுகாப்பின்மை என்பன பெருகுகின்றன. மார்க்ஸ் குறித்த இவ்விதி இன்று உலக மட்டத்தில் வியாபித்துச் சென்றுள்ளதை காணலாம். உலக ரீதியான மூலதனத் திரட்சியின் (World Accumulation) ஒரு வெளிப்பாடே மூன்ரும் உலகின் வறுமையும், துன்பமும், துயரமும். ஏ . ஜி பிராங், சமிர் அமின் (Samir Amin) ஆகிய பொருளியலாளர்கள் இவ்வுறவினை பின்வரும் எதிர்நிலைகளின் செயற்பாடுகளால் விளக்குவர்.

மைய நாடுகள்←→சார்பு நாடுகள்

மூலதனத் திரட்சி←→மூலதன வெளியேற்றம்

விருத்தி←→குறைவிருத்தி

ஐக்கிய அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, யப்பான் ஆகிய நாடுகளை நோக்கி மூலதனம் குவிவதையும் வறுமையும், துன்பமும் மறுபுறம் குவிவதையும் நாம் காண்கிறோம். உண்மையில் பனன் (Fanon) என்னும் அல்ஜீரிய நாட்டுப் புரட்சியாளர் தம நூலின் தலைப்பாகக் குறித்த 'The Wretched of the Earth' (பூவுலகிலேயே மிகவும் கீழ்ப்பட்டோர் —இழி பிறப்புகள் என்பது பொருள்) என்பது மூன்ரும் உலகுக்கும் மிகவும் பொருந்திய ஒருதொடர். லத்தின் அமெரிக்க எழுத்தாளர் கலினோ (Galino) லத்தின் அமெரிக்காவின் பொருளியல் சுரண்டல் பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறுர். அதற்கு 'The Open Veins of Latin America' என்று பெயரிட்டுள்ளார். லத்தின் அமெரிக்காவின் குருதி நாளங்கள் உடைப்பெடுத்துப் பெருகுகின்றன. என்பது உருவகப் பொருள். மூன்ரும் உலகின் கொள்ளையும் சுரண்டலும் தான் மையநாடுகளின் விருத்திக்கும் நவகாலனிகளின் குறைவிருத்திக்கும் மூலகாரணம் என்பது வெளிப்படை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தின் அனுசரணையும் அதனது பிரசாரகர்களும்

உலகின் பயங்கரவாதத்திற்கு சூத்திரதாரியான ஐக்கிய அமெரிக்கா தன்னை ஜனநாயகத்தின் காவலராக வெளிஉலகிற்கு காட்டமனையும் அதேவேளை பிற்போக்கான பயங்கரவாதச் செயல்களுக்குப் பகிரங்கமாகவே ஆதரவும் ஊக்கமும் அளித்து வருகின்றது. அண்மையில் டியூனிஷியாவில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமையலுவலகம் இஸ்ரேலினால் குண்டுத் தாக்குதலுக்குட்படுத்தப்பட்டபோது அமெரிக்கா இந்நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கியிருந்தது அமெரிக்காவைப் பற்றி "International Affairs" எனும் சஞ்சிகையில் ஐப்பசி 84 இதழில் B.Dmitriyev என்பவர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தினை இங்கு தருகிறோம்.

தற்கால அமெரிக்க நிர்வாகமானது அதன் ஆக்கிரமிப்பு வெளிநாட்டுக் கொள்கையை மறைப்பதற்கான தனது வழமையான பொய்க்கதைகளான (கட்டுக்கதைகள்) வாஷிங்டனின் அமைதியான போக்கைக் கூறுகிறது. அதாவது சமாதானத்தை விரும்புவதாக கூறுகிறது. சமீப காலமாக அமெரிக்க இராச்சியமானது (United States) "சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம்" எனும் விடயத்தில் தனக்கிருக்கும் பற்றை அடிக்கடி எடுத்துக்கூறி வருகிறது. ஜனாதிபதி றேகனும் இதைப்பற்றிக் குறிப்பிடுவதற்குத் தவறுவதேயில்லை. இச் சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான ஒரு தொகை சட்ட மசோதாக்கள் காங்கிரஸின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தின் கீழ், இறுதியாக நடந்த லண்டன் சந்திப்பில் ஏழு முதலாளித்துவ நாடுகளின் தலைவர்கள் விசேட "சர்வதேச பயங்கரவாதம் பற்றிய பிரகடனம்" ஒன்றை ஏற்றுக்கொண்டுள்ளனர். பயங்கரவாதத்திற்கு எதிரான வாஷிங்டனில் நடைபெற்ற ஒரு சர்வதேச மாநாட்டிலே விரிவுரைநிகழ்த்திய ஐக்கிய அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஒரு கொள்கை ரீதியான அணுகுமுறை இப் பிரச்சினைக்குத் தேவை எனக்கூறுகிறார்.

வாஷிங்டன் அதிகாரிகளின் உரைகளாவன ஜோர்ஜ் நூர்வல் எனும் மேற்கு நாடுகளின் வாடிக்கையாளர் ஒருவரால் பக்குவப்படுத்தப்பட்டவையாகும். இவ் ஜோர்ஜ் நூர்வலானவர் கண்கண்ட திட்டங்கள் பலவற்றிற்கு தலைகீழான வியாக்கியானங்கள் கொடுப்பதில் கைதேர்ந்தவர் என கூறப்படுபவர் உதாரணத்திற்கு வாஷிங்டனது "மக்களின் நன்மைக்கான" தனது "திட்டம்" ("பங்களிப்பு") குறித்து பெருமைப்படுகிறது; ஆனால் அதே வேளை இது தனது நன்மைகளிற்கு பாதகமாக இருக்கும் நாடுகளின் தலைவிதியை தனது அதிகாரத்துள் போடுகிறது. "சுதந்திரத்திற்கான போராளிகள்" என வாஷிங்டனால் சொல்லப்பட்டு வாஷிங்டனால் ஆதரவளிக்கப்படுபவர்கள் பொதுவாக கொள்ளைக்காரர்களாயும், எதிர்ப்புரட்சியாளர்களாகவும் காணப்படுவதுடன் தம் மக்களாலேயே வெறுத்து ஒதுக்கப்படுபவர்களாக காணப்படுகின்றனர். ஆனால் அதற்கு எதிரிடையாக உண்மையிலேயே தம் நாடு சுதந்திரமடைய வேண்டுமென விரும்புவர்கள் "பயங்கரவாதிகள்" என முத்திரை குத்தப்படுகின்றனர்.

அமெரிக்காவானது தற்போதைய உலகின் வன்செயல்களிற்கு காலாக இருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் மறுக்கமுடியாத உண்மையை வாஷிங்டனது பிரசாரத்தால் மறைக்கமுடியவில்லை.

அமெரிக்காவின் உலகளாவிய பயங்கரவாதமானது தனிப்பட்டவர்களிற்கு எதிராக மட்டுமன்றி ஒரு முழு நாட்டிற்கும் எதிராகக்கூட ஏவப்படுகிறது. அமெரிக்காவின் பொருளாதார பலத்தை வெளிநாடுகளில் மிகவும் ஸ்திரமான நிலையில் வைத்திருப்பதற்காக, இத் தனி நோக்கத்திற்காக மட்டும் பல போர்களை அமெரிக்காவானது இரண்டாம் உலகப் போரின் பின் நடாத்தியுள்ளது. உலகின் காவலராக தன்னைக் கூறும் வாஷிங்டனின். முரட்டுத்தனமான இராணுவ நடவடிக்கைகளினால் உலகின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளது அமெரிக்காவின் கொள்கையானது தன்னுடைய நாடுகளின் சட்டபூர்வமான உரிமைகளை நசுக்குவதுடன், இனவாதம், தேசிய வெறுப்புணர்ச்சி என்பவற்றை பயங்கரவாதத்தின் மூலம் வளர்த்து பயங்கர அடக்குமுறையுடன் கூடிய சர்வாதிகார ஆட்சியொன்றை உருவாக்குவதாகவே அமைந்துள்ளது. சர்வதேச நிலையை மேலும் மோசமாக்குவதில் இக்கொள்கை குறியாகவுள்ளது சமீபத்திய ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டிலே தன்னை வெளிநாட்டவர்களும், ஏன் சில அமெரிக்கர்களும் கூட "உலகத்தையே அழிக்கப் போகும் ஒரு பேராசைக்காரன்" எனக் கூறுவதாக அமெரிக்க ஜனாதிபதி ரொனல்ட் றேகன் வருத்தம் தெரிவித்திருந்தார்.

இவ் விடயம் அடிப்படையற்றதொன்றல்ல. அமெரிக்க கொள்கையானது சர்வதேச நெருக்கடிகளும், இராணுவ மோதல்களும் நிறைந்த ஒரு மிகப் பயங்கரமான கொள்கை என்பது மிகவும் தெரிந்தவொன்று. கடந்த தேர்தல் மேடைகளில் "தற்போதைய நிர்வாகமும் தற்போதைய ஜனாதிபதியும் மென்ன யுத்த காலத்திலேயே போர்கருவார்த்தைகளை எழுப்பிய அணுவாயுத பரிகரண மாநாடுகளை சோவியத் யூனியனுடன் நடாத்த மறுத்த, சோவியத்துடனான உறவுகளை குறைக்க முதலாமவர்கள்" என ஜனநாயகக்கட்சி (Democratic Party) சொன்னது தற்செயலான ஒன்றாக இருக்க முடியாது. அத்துடன் தற்போதைய நிர்வாகமானது புது ஆயுதங்களை உருவாக்குவதுடன், உலகில் குழப்ப நிலையை உருவாக்குகிறது எனவும், பல பில்லியன் டொலர் செலவு பண்ணி பயங்கர ஆயுதங்களை விண்வெளியில் நிறுத்த முயல்கிறது எனவும், அத்துடன் இரசாயனப் போரிற்கு பல கோடி டாலர் செலவில் திட்டங்களைத் தீட்டுகிறது எனவும் அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

அத்துடன் இலக்கம் S 26 6 எனும் சட்டமசோதாவை காங்கிரஸிடம் சமர்ப்பித்த அரசாங்கம் ஆனது தனது வெளிநாட்டு அமைச்சின் மூலம், அமெரிக்க நலன்களிற்கு எதிராக நடக்கும் எந்தவொரு நாட்டையுமோ, அன்றி இயக்கத்தினையோ "பயங்கரவாதி" என அழைக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளது இங்குள்ள எதிராக என்பதிலேயே எல்லா விடயமும் தங்கியுள்ளது.

இப்படிப்பட்ட ஒரு நீதியற்ற சட்டத்தை சட்டபூர்வமாக்குவதை Capitol Hill கூட எதிர்க்கிறது யாப்புரிமைக்கானதும் மக்கள் மன்றத்தின் உபகுழுவின் தலைவருமான டொன் எட்வர்ட் விடுத்த ஒரு அறிக்கையில் நிர்வாகத்தினால் வழிமொழியப்பட்ட சட்டமூலமானது அரசியல் யாப்பின் அடிப்படைக் கொள்கைகளிருந்து முரணானது எனக் கூறியுள்ளார். எனினும் இராஜாங்க செயலாளர் இச் சட்டங்களின் தொகுப்பை அமுலுக்கு கொண்டு வரமுடியும். வெளிநாட்டு அலுவல்கள் குழுவின் தலைவர் டென்டே பஸ்கால் தன்னிச்சையாக நடக்கும் எந்த நாட்டிற்கும் எதிராகவோ அன்றி எந்த இயக்கங்களுக்கும் எதிராகவோ தமதுபுதிய கொள்கை பிரயோகிக்கப்படும் எனக் கூறியுள்ளார்.

இந்த நியாயமற்ற கொள்கையானது அமெரிக்காவின் நன்மைகளை பொருந்துகிறது. இராஜாங்க திணைக்களந்தான் அமெரிக்க பயங்கரவாதிகளின் பட்டியலில் லிபியா, சிரியா, கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு, பலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO), தென் கிழக்கு ஆபிரிக்க மக்கள் இயக்கம் (SWAPO) என்பன அடங்குகின்றன. சுருக்கமாக சொல்லப்படின் அமெரிக்க ஏகாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திய கொள்கையை எதிர்க்கும் அனைவரும் பயங்கரவாதிகள் எனப்பட்டம் பெறுகின்றனர்.

இந்நேரத்தில் ஒரு நியாயமான கேள்வி உருவாகிறது USA ஆனது என்ன பட்டியலின் கீழ் இஸ்ரேலைக் கருதுகிறது? இஸ்ரேலானது அரபுக்களிற்கு எதிரான அரச பயங்கரவாதத்தை தன் கொள்கையாக கொண்டுள்ளது. லெபனானை தொடர்ந்து ஆக்கிரமித்து வைத்திருப்பதுடன் ஷப்ரா, ஷடில்லா போன்ற பலஸ்தீன முகாம்களில் பல பலஸ்தீன அகதிகளை கொன்று குவித்திருந்தது. இந்த இஸ்ரேலை அமெரிக்கா எவ்வாறு கணிக்கிறது? ஆனால் இந்த விடயம் முற்று முழுக்க வித்தியாசமானதாம். இஸ்ரேலிய பயங்கரவாதிகளை அமெரிக்கா தன்னாலியன்ற வரை நியாயப்படுத்துவது மாத்திரமின்றி, இஸ்ரேலிய பயங்கரவாதிகளின் முறையிலேயே தனக்கு கீழ்ப்படியாதவர்களிற்கு பாடம் புகட்ட அமெரிக்கா முனைகின்றது. CIAஇன் நெறியாளரான வில்லியம் கசி என்பவர் ''பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளின் மீது இஸ்ரேலைப் போல அமெரிக்காவும் நடவடிக்கை எடுக்கும்'' என்று கூறுகிறார். அவர் மேலும் ''நாமும் இஸ்ரேலைப் போல ஒன்றுமறியாதவர்கள் மீது தாக்குவதற்கு பின்னிற்கிறோம் ஏனெனில் எமக்கு மனச்சாட்சி உள்ளதன் காரணமாக இராஜாங்க செயலாளர் இப்படிச் செய்வதற்கு பின்னிற்கிறார்'' எனக் கூறுகிறார்.

வாயளவில் தான் இராஜாங்க திணைக்களம் ''பின்னிற்கிறது'' எனினும் பென்டகனும், CIA யும் பயங்கரவாதச் செயல்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளன. அமெரிக்கப் பத்திரிகைகளின்படி அமெரிக்காவானது தற்போது ஏறக்குறைய அரசின் பெரும் நடவடிக்கைகளில் வெளிநாடுகளில் இரகசியமாக ஈடுபட்டுள்ளது என்றும் 50 இற்கும் மேற்பட்ட சிறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது என்றும் தெரிவிக்கின்றன. CIA யின் மூலம் மட்டுமே 70 மில்லியன் டொலருக்கும் மேல் நிக்கரகுவாவின் எதிர்ப்புரட்சியாளர்களிற்கு வழங்கப்பட்டுள்ளது Us News World Report எனும் சஞ்சிகையின் படி CIAயானது ஆப்கான் புரட்சியாளர்களிற்கு ஆயுதங்கள் வெடிமருந்துகள் வாங்குவதற்கான தனது இரகசிய ஆதரவை வருடத்துக்கு 75 Million டொலருக்கு குறையாமல் வழங்குவதற்கு முன்வந்துள்ளது. அமெரிக்காவின் காவல் (America's Watch) என்னும் நிறுவனத்தின் படி அமெரிக்க ஆலோசகர்களால் நெறிப்படுத்தப்படும் எல்சல்வடோரின் இராணுவமானது கடந்த சில மாதங்களுள் 1330 அப்பாவிக் குடிமக்களை கொன்று குவித்துள்ளது.

இப்போது வாஷிங்டனானது ''பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம்'' எனும் போர்வையின் கீழ் அமெரிக்காவின் இரகசிய சேவையினது குற்றங்களை பாராமுகமாக விடுகிறது இப்படிப்பட்ட அநியாயங்களிற்கும், குற்றங்களிற்குமான அனுசரணையான சட்ட மசோதாக்கள் காங்கிரஸின் முன் வைக்கப்பட்டுள்ளன.

ஒரு சில சட்டவாக்க அறிஞர்களே மத்திய அமெரிக்காவில் CIAயின் நடவடிக்கைகள் கை மீறிய நிலையில் கட்டுப்பாடற்ற நிலையில் இருப்பதை பற்றி கவலையடைகின்றனர். உலகின் வேறு பகுதிகளிலும் CIA யின் நடவடிக்கைகள் கட்டுப்பாடின்றியுள்ளன எனவும் இவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் குடிசன சுதந்திர இயக்கமானது அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு சக்திகளானது அமெரிக்க மக்களிற்கெதிராக அவர்களின் உரிமைகளிலும், சுதந்திரத்திலும் தலையிடும் போது அமெரிக்கர்கள் இதனால் பாதிக்கப்படுவர் என எச்சரித்துள்ளது.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியமும் (USSR) ஏனைய சோசலிச நாடுகளும் உதவி செய்கின்றன என்ற தப்பான பிரசாரத்தை அமெரிக்க தற்போதைய நிர்வாகமானது 1981 ஆம் ஆண்டு மாரி காலத்திலிருந்து நடாத்தி வருகிறது. ''மனோதத்துவ போர் முறையின்'' படி அமெரிக்காவினது ராஜாங்கத் திணைக்களமானது ஐரோப்பிய சோசலிச நாடுகள் ''சர்வதேச பயங்கரவாதத்துடன்'' தொடர்புள்ளன எனச் சமீப காலமாக கூறிவருகிறது. மேலும் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு சார்பான தீர்மானங்களையும் உருவாக்கி வருகிறது.

வாஷிங்டனின் "வேறுபட்ட கோரிக்கை"களை தனிப்பட்ட சோசலிச நாடுகள் ஏற்றுக் கொள்வதிலேயே அமெரிக்காவிற்கும் இவற்றிற்கும் இடையிலான உறவின் நன்மை தங்கியுள்ளது என அமெரிக்கா கூறுகிறது.

மிகவும் சகிக்க முடியாத விடயம் என்னவெனில் பல்கேரியப் பிரஜையான S. அன்டனோவ் என்பவரிற்கு மேலே, இவர் போப் ஜோன் போல் II ஐ கொலை செய்ய முயன்றார் எனும் ஆதாரமற்ற குற்றச்சாட்டாகும். ஜோர்ஜ் சூலிட்ஸ் சொல்கிறார் "நாங்கள் இப்போது ஒரு நடுநிலையான கேள்விக்கு விடை தேடிக்கொண்டிருக்கிறோம். இதை இத்தாலிய அதிகாரிகள் தீர்ப்பார்கள் என நம்புகிறோம். கேள்வி என்னவெனில் சோவியத் யூனியனிற்கு போப்பை சொல்லுவதில் இருந்த பங்கு எவ்வளவு? என்பதாகும்".

அந்த வேளையில் CIA ஒற்றர்களிற்கும், போப்பின் மேல் சென். பீற்றர் சதுக்கத்தில் 81 வைகாசியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட துருக்கிப் பயங்கரவாதி மொகமட் அலி அக்காவிற்கும் இடையிலான தொடர்பை பற்றி சேகரிக்கப்பட்ட போதுமானளவு ஆதாரங்களுள்ளன. அதன் பின் வெளிச்சக்திகளின் தூண்டுதலால் இப் பயங்கரவாதி இக்கொலை முயற்சியில் பல்கேரியாவிற்கும் தொடர்புண்டு எனும் கதையை சிருஷ்டித்திருந்தான். பல்கேரியாவின் குடிமகன் ஒருவன் போப்பை கொல்லுவதற்கு முயன்றான் எனும் பொய்யான குற்றச்சாட்டைக் காரணம் காட்டி USசெனட்டானது பல்கேரியாவிற்கு எதிரான வர்த்தகத் தடைகளை கொண்டுவர நிர்ணயித்தது. எனினும் "பல்கேரியாவானது தன் மீது சுமத்தப்பட்ட போப்பைக் கொல்ல முயன்றதாக சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து பொய்க்குற்றச்சாட்டுக்களையும் மறுக்கிறது" என பல்கேரியாவின் தினசரியான Robot-nicheskodelo கூறுகிறது. இத்துடன் பல்கேரிய மக்கள் குடியரசானது பயங்கரவாதத்தின் மூலம் சர்வதேசத்தில் இடம் பிடிக்க சிலர் எடுக்கும் முயற்சிகளுக்கெதிராக போராடி வருகிறது எனவும் அத்தினசரி கூறுகிறது. மேலும் 'பயங்கரவாதத்தை அரசாங்கத்தின் கொள்கை என்ற அளவிற்கு உயர்த்திய றீகன் நிர்வாகம் பயங்கரவாதத்தினை பற்றி சொல்ல அருகதையற்றது" என அது மேலும் தெரிவித்தது.

எனவே இப்பத்திரிகையானது வாஷிங்டனின் உத்தியோக பூர்வ கொள்கையை மிக வடிவாக வரைவிலக்கணப்படுத்தியுள்ளது. வெள்ளை மாளிகையானது எத்தனை தரம் சொன்னாலும், அமெரிக்காவானது பயங்கரவாதத்தையும், வன்செயல்களையும் தனது சர்வதேச விவகாரங்களில் நிரந்தரமாக பயன்படுத்தி வருகிறது எனும் உண்மையை மறைக்க முடியாது. பயங்கரவாதத்திற்கான அனுசரணையானது வளர்ந்து வரும் மக்களின் விழிப்புணர்வினால் எதிர்க்கப்பட்டு வருகிறது.

---

## அட்டைப்படம்

சர்வதேச பயகரவாதத்திற்கு காலான ஐக்கிய அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான இஸ்ரேல் பலஸ்தீன மக்களின் பிரதேசங்களை ஆக்கிரமித்ததுடன் அவர்களை அகதி முகாம்களிலும் வைத்துக் கொன்றதோடு, நாளாந்தம் இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இஸ்ரேலிய மொசாட்டின் ஆலோசனையின்படி இயங்கும் ஸ்ரீலங்கா அரசும் இஸ்ரேலின் வழியைப் பின்பற்றி இனஅழிப்பினைத் தீவிரமாக்கியுள்ளது. ஸ்ரீலங்கா அரசாலேயே முன்மொழியப்பட்டு அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட போர்நிறுத்தக் காலத்திலேயே திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சியோனிஸ்டுகள் (Zionists) அமெரிக்காவுடன் இணைந்து மேற்கொள்ளும் சர்வதேச பயங்கரவாதத்தின் வெளிப்பாடே அட்டைப்படம்.

நன்றி:- PALESTINE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது கலாசாரம் பற்றி....

→கவிதா←

போர் நிறுத்தம் எமக்குச் சாதகமாக இருந்ததா அல்லது எதிரிக்குச் சாதகமாக இருந்ததா என்பது பற்றிய ஒரு அறிவார்ந்த கருத்துப்பரிமாற்றம் இதுவரை நடைபெறவில்லை என்பது வருந்தத்தக்கது. எனினும் இச் சூழலில், திடீரென கலாசார வெளிப்பாடுகள் வீச்சுடன் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. இது ஒரு நல்ல அம்சம்; தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆழ, அகலங்களை விரிவுபடுத்தும் ஒரு முக்கியமான அம்சமும் கூட.

'கலாசார வெளிப்பாடுகள்' என்று இங்கு பொதுவாகக் குறிப்பிடப்படுவது பல உப பிரிவுகளை உள்ளடக்குகிறது. நாடகங்கள், தெரு நாடகங்கள், வில்லுப்பாட்டு, பொய்க்கால் குதிரை ஆட்டம், விடுதலைப் பாடல்கள், விவரணத் திரைப்படங்கள் என்று 'நிகழ்த்தப்படும் கலை'களாகப் பல வெளிப்பாடுகள் அமைகின்றன. போர் நிறுத்தச் சூழல் இவற்றை பரவலாக எல்லா இடங்களிலும் கொண்டு செல்லவும் நிகழ்த்தவும் உதவுகிறது. இந்த ஒரு அம்சத்திலாவது போர் நிறுத்தத்தைப் பயன்படுத்துவதில் நாம் வெற்றிகண்டுள்ளோம்.

புதிய, கலாசார வெளிப்பாடுகளின் பிரதானமான அம்சம் யாதெனில் நமது பாரம்பரியக் கலைச் செழுமையில் வேர் கொண்டிருப்பதாகும். நாட்டார் வழக்கியல் என்று வழங்கப்படும் (இச்சொல் நாட்டுப் பாடல்கள், கிராமிய மரபு, ஒழுக்கங்கள், கரணம் போன்ற பலவற்றை ஒருங்கே குறிக்கிறது) கற்கை நெறி எம்மிடம் பிரபலமாகவில்லை. இதனுடைய அவசியமும், இன்றியமையாமையும் இன்று உணரப்பட்டுள்ளது. தேசிய விடுதலைப் போராட்டத்தின் அடித்தளமாக ஒரு தேசியக் கலாசாரம் அமையும். இத்தகைய தேசிய கலாசாரம் முழுமையான பரிமாணங்களுடன் இல்லாவிட்டால் அது தேசிய விடுதலை போராட்டத்துக்கு ஊடாக தன்னை முற்றுகச் செழுமைப்படுத்திக் கொள்ளும். அத்துடன் போராட்டத்திற்கும் எழுச்சி, நம்பிக்கை, மனித நேயம், உயர் விழுமியங்களை நிலைநாட்டுதல் என்ற அம்சங்களை நிலை நிறுத்தித் தரும்.

எமது கலாசாரம் என்று வலியுறுத்துகிறபோது நம்மவர்களில் பலபேர் பொதுவாகவே 'தமிழ்க் கலாசாரம்' என்று கருதுகிறார்கள். இது தமிழ்நாட்டையும், ஈழத்தையும் ஒட்டுமொத்தமாக ஒரு கலாசார அமைப்புடன் இணைப்பதாகும். அடிப்படையில், தமிழ்மொழி என்னும் முக்கியமான அம்சத்தில் எமக்கும் தமிழ்நாட்டுக்கும் மிக நெருங்கிய உறவுகள், பிணைப்புக்கள், கலாசாரம் சார்ந்து உள்ளன என்பது உண்மையே ஆயினும் சிறப்பான நிறைய வேறுபாடுகளும் உள்ளன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக நமது கலாசார அம்சங்களான வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துக்களைப் பாருங்கள். இவை நமக்கு மட்டுமே உரியன; தமிழ் மொழிப் பேச்சு வழக்கை பாருங்கள் நமது தமிழ் எப்படி வேறுபடுகிறது.

2500 வருடங்களுக்கு முன்பிருந்தே ஈழத்தில் தனித்துவமான தமிழ் கலாசார வழக்கு ஒன்று இருந்திருக்க முடியும் என்பதற்கான ஆதாரங்களை ஆனைக்கோட்டை அகழ்வாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

எனவே இந்தியத் தமிழகமும், ஈழத் தமிழகமும் நிச்சயமாகவே தமக்கெனத் தனித்துவங்கள் உடையன. இத் தனித்துவங்கள் பேணப்படுவதும், வளர்க்கப்படுவதும் மிக அவசியமாகும். அமெரிக்கர்களும், ஆங்கிலேயர்களும், அவுஸ்திரேலியர்களும் ஆங்கிலம் பேசினாலும் கலாசார பண்பாட்டு அம்சங்களில் எவ்வளவு வேறுபாடும், தனித்துவங்களும் கொண்டுள்ளனர் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தேசிய கலாசார அம்சங்களை நாம் மேலும் வலிவு படுத்துவது மட்டுமல்ல அதனது பூரண வெளிப்பாட்டிற்கும் இடம் தர வேண்டும். இதற்கு நமது இலக்கியங்கள், நமது கலைகள், நமது நாடகங்கள், நமது நிகழ்ச்சிகளை பரவலாக்குவதும் ஊக்கு விப்பதும் அவசியம். அதே நேரம் அந்நியனை நாவல்களை — அவை மூன்றாந்தர ஐரோப்பிய குப்பை எழுத்துக்களாயினும் சரி தமிழ் நாட்டு நச்சு இலக்கியங்களும், மூன்றாந்தர சினிமாப் படங்களாயினும்சரி எதிர்க்க வேண்டும்.

இந்த எதிர்ப்பு - அதற்குரிய சரியான பதில் கலைப்படைப்புக்களையும் மக்களுக்கு வழங்கியபடியேதான் செய்யப்பட வேண்டும். இல்லையேல் மக்களிடமிருந்து நாங்கள் தனிமைப்பட்டுப்போக நேரிடும்.

படுமோசமான - சாரம்சமே அற்ற - வெறும் பொழுதுபோக்கு 'வீடியோ' படங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. இவற்றை ஆயிரக் கணக்கில் மக்கள் பார்க்கிறார்கள். இவர்களின் கனவுகளை சிதைத்து நனவு நிலைக்கு கொண்டுவருவது அவசியம்.

உடனடியாக, தென்னிந்திய, ஐரோப்பிய தொழில்நுட்பத்தரங்களில் திரைப்படங்களை அல்லது ஒலிப்பதிவு நாடாக்களை 'வீடியோ' படங்களை நாமே தயாரிக்க இயலாது போகலாம். எனினும் தொழில் நுட்பத்தரம் தான் நூறுவீதமும் என்று இல்லை இன்றைய கலை வெளிப்பாடுகள் மக்களிடம் பெறும் வரவேற்பினைப் பார்க்கும் போது இது தெளிவாகப் புரியும்.

நமது தேசிய கலாசார அம்சங்கள் பற்றிய விழிப்புணர்வு மிகவும் துல்லியமாக நம்மிடம் இருக்க வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் நாட்டு பேச்சு வழக்கோ. சென்னைத் தமிழோ நமது படைப்புகளில் இடம்பெற முடியாது நமது திரைப் படங்கள், நாடகங்கள், நாம் தயாரிக்கும் கலை நிகழ்ச்சிகள் அனைத்திலும் நமது தமிழ் வழக்கு இடம்பெற வேண்டும். இது மிகவும் அவசியமானதாகும்.

ஆரம்பத்தில், நமது நாடகங்கள் கூட தென்னிந்தியப் பாணியிலேயே அமைந்திருந்தன. திரைப்படங்கள் எமது பேச்சு வழக்கில் தயாரிக்கப்பட முடியாது என்பதில் எம்மவர்கள் உறுதியாக இருந்தனர். எமது பண்பாட்டுப் பின்னணியில் தயாரிக்கப்பட்ட 'பொன்மணி' வெற்றியைத் தரவில்லை.

இன்று நாடகங்கள், வானொலி நாடகங்கள் அனைத்திலும் நமது வழக்குத் தமிழ் இடம் பெற்றுவிட்டது. சிறுகதைகளும் பெரும்பாலும் நமது வழக்குத்தமிழுக்கே வந்துவிட்டன.

இன்றைய புதிய கலாசார விழிப்புணர்வு இந்த அம்சத்தை மேலும் உறுதியாக்க வேண்டும். இந்தியாவைப் பெருமளவு நம்பியும், இந்தியாவில் பெருமளவு தங்கியும் இருத்தலால் நமது விடுதலைப் போராட்டத்துக்கு வருகிற ஆபத்துக்கள் ஒருபுறமிருக்க இத்தகைய தங்கியிருத்தலால் ஏற்படுகிற கலாசார பாதிப்பையும் எதிர்த்து நாம் செயற்பட வேண்டிய அவசியம் உள்ளது. இதனை பிரக்ஞை பூர்வமாக உணர்ந்து கலாசாரத் தளத்தில் பணிபுரியும்படி அனைத்துக் கலாசாரக் குழுக்களுக்கும், கலை இலக்கியவாதிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்கா: இன்னொரு தமிழீழம்

தற்போது சிறைவைக்கப்பட்டிருக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கத் தலைவரான 'நெல்சன் மண்டேலே' அவர்கள் உள்ள சிறைச்சாலையை நோக்கி கேப்டவுனில் இடம் பெற்ற மிகப்பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் தென்னாபிரிக்கா பொலிஸாராலும், இராணுவத்தாலும் கலைக்கப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் பாவித்தனர். இதனால் ஆவேசமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரையும், இராணுவத்தினரையும் நோக்கி பெற்றோல் குண்டுகளை வீசி எதிர்த் தாக்குதல்களை நடத்தினர். இச்சம்பவங்களால் ஐவர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமடைந்தனர். சுமார் 50 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ் ஊர்வலம் செல்வதற்கு முன்னதாகவே எதிரணி முக்கியஸ்தர்கள் சிலரும், ஊர்வலம் ஏற்பாடு செய்தவர்கள் சிலரும் 'நிறவெறி' அரசாங்கத்தினால் (Apartheid) கைது செய்யப்பட்டிருந்தனர். மேலும், கலவரத்தின் போது அதனை தவிர்ப்பதற்காக சமாதான முயற்சியில் மத்தியஸ்தம் வகித்த கிறிஸ்தவ பாதிரிமார் சிலரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறிருக்க, கடந்த சில வாரங்களுக்கு முன் டர்பனில் நிகழ்ந்த கலவரங்களின் போது மகாத்மா காந்தி குடியிருப்புப் பகுதிக்குள் உள்ள ஐந்து மாடிக்கட்டிடமும், மற்றும் நூலகம், பாடசாலை என்பனவும் முற்றாகச் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைகள்-ஜனநாயகக் கோட்பாடுகள்-அரசியல் தர்மங்கள் போன்றவற்றினை துச்சமாக மதிக்கும் தென்னாபிரிக்க அரசின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக 1976 ஆனி 16 ஆம் திகதி சகல தென்னாபிரிக்க கறுப்பின மாணவர்களை உள்ளடக்கியதான ஒரு பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினை கேப்டவுனில் நடத்திய போது நிறவெறி அரசின் கூலிப்படைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது சுமார் 618 மாணவர்கள் உயிரிழந்ததாக நம்பப்படுகிறது. இத்தகைய சம்பவங்கள் இன்று, நேற்று தொடங்கியதல்ல; தென்னாபிரிக்காவின் நீண்டகால வரலாறு ஆகும்.

திடீரென தானியங்கித் துப்பாக்கிகளையும், குழல் துப்பாக்கிகளையும் தாங்கிய வண்ணம் பொலிசும், இராணுவமும் கவச வண்டிகளிலும், குதிரைகளிலும் வருவார்கள். நள்ளிரவில் கதவுகளை உடைத்து கறுப்பினத்தவர்களை கொற கொறவென வெளியே இழுப்பார்கள். பட்டப் பகலிலே வீதிகளில் தடைகளை போட்டு பஸ்களிலிருந்து கறுப்பர்களை வெளியே இழுப்பார்கள். ஜோஹன்ஸ் போக்கை சுற்றிவரவுள்ள தொழில் மயமான பகுதியான ருவைஸ்வாலிலும், போட் எலிசபத்திலுள்ள கிழக்குக் கேப் பகுதியிலும் நிறவெறி கசாப்புக் கடைக்காரர்கள் அமுல் நடத்திய அவசரகால ஆட்சியிலே ஆகக் குறைந்தது 1400 கறுப்பின மக்கள் காலவரையின்றி சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கெதிராக எந்தவொரு குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை அவர்களுடைய குடும்பத்தினரோ அன்றி வழக்கறிஞர்களோ சந்திக்க அனுமதிக்கப்படுவதில்லை. 1977ல் கறுப்பின உணர்வு இயக்கத்தின் தலைவர் ஸ்ரீவ் பிக்கோ (Steve Biko) பொலிஸ் பாதுகாப்பில் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். இதே கதிதான் இன்று கைது செய்யப்பட்டிருக்கும் கறுப்பினத்தவர் பலரும் நேரவிருக்கினறது.

தென்னாபிரிக்க நிறவெறி அரசினை எதிர்த்து அண்மையில் தொடங்கப்பட்ட கிளர்ச்சிகளில் 500க்கு மேற்பட்ட கறுப்பின மக்கள் கொல்லப்பட்டார்கள். அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டபின் மேலும் ஆகக்குறைந்தது 24 கறுப்பின மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களில் பெரும்பாலோர் இராணுவத்துடன் தொடர்புள்ள கொலைகாரக் கும்பல்களாலேயே கொலை செய்யப்பட்டார்கள். இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறு கொல்லப்பட்டவர்களில் ஒருவர்தான் பிரபல கறுப்பின மனிதஉரிமை வழக்கறிஞரான பெண்மணி விக்ரோரியா எமக்சிங் (Victoria Mxenge). நிறவெறி அரசிற்கான எதிர்ப்பை நசுக்கும் பொருட்டு கறுப்பின மக்களை பட்டினி போடப்போவதாக வெள்ளைக்கார ஆட்சியாளர்கள் அச்சுறுத்தினர். வெள்ளைக்காரர் நடாத்தும் வர்த்தக நிலையங்களை கறுப்பின மக்கள் பகிஸ்கரித்து வருவதனால் அதற்கு பதிலடியாக ஆட்சியாளர்கள் கறுப்பர்கள் நடாத்தும் கடைகள் யாவற்றையும் பலவந்தமாக மூடப்போவதாக அறிவித்துள்ளனர். சட்டப்படி கறுப்பின மக்கள் தமது நிறவெறி அரசிற்கான எதிர்ப்பை தெரிவிக்கக் கூடிய ஒரே ஒரு வழியாக மரண ஊர்வலங்கள் இருப்பதனால் வெள்ளையர் ஆட்சி அதற்கு தடைவிதித்துள்ளது.

இந்தக் காட்டு மிராண்டித்தனமான நடவடிக்கைகள் அவசர கால நிலைக்கு உட்பட்ட பகுதிகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கிள்ளி எறியத் தவறவிட்டிருப்பதுடன் வேறு பகுதிகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தோன்றுவதற்கு தூண்டு கோலாக உள்ளன. குறிப்பாக பெரிய நகர்ப்பகுதிகளான கேப்டவுன், டேர்பன் பகுதிகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தலைதூக்கியுள்ளன. மரண ஊர்வலங்களுக்கு தடை விதிக்கப்பட்ட அடுத்த நாள் 8000க்கு மேற்பட்ட கறுப்பினத்தவர்கள் அவசர கால நிலைக்கு உட்பட்ட பகுதிக்குச் சற்று வெளியேயுள்ள நகரப் பகுதியில் ஒரு மரண ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். போட் எலிசபெத்துக்கு அண்மையிலுள்ள ஓர் கறுப்பின குடியேற்றத்தில் ஓர் மரண ஊர்வலத்தில்கலந்து கொண்ட 1500க்கு மேற்பட்ட கறுப்பின மக்கள் ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கு ஆதரவாக கோசித்த வண்ணம் வீதி வழியாக சென்றனர். இந்தக் காங்கிரசே மிகப் பழமையான, மிகப் பிரபலம் வாய்ந்த கறுப்பின மக்களின் தேசிய நிறுவனமாகும். இக்காங்கிரஸ் தடை செய்யப்பட்டது மட்டுமல்ல அதை ஆதரித்து கருத்து வெளியிடுவதோ அல்லது காங்கிரஸ் பிரசுரங்களை வைத்திருப்பதோ பாரிய குற்றங்களாக கணிக்கப்பட்டு கொடூரமான தண்டனைகள் வழங்கப்படுகின்றன.

கேப்டவுனிலும், டேர்பனிலும் பல்லாயிரக்கணக்கான கறுப்பின, கலப்பின மாணவர்கள் வகுப்புகளை பகிஸ்கரித்து போத்தாவின் (Botha) காட்டுமிராண்டித்தனமான விதிகளுக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். யூலை 31ம் திகதி பல்லாயிரக் கணக்கான கறுப்பின மாணவர்கள்- கறுப்பினத்தவர்கள், இந்தியர்கள், வெள்ளையர்கள்- விடுதலைக் கீதங்களை இசைத்த வண்ணம் ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் கோசங்களை ஒலித்த வண்ணம் டேர்பன் பல்கலைக்கழகத்திற்கு ஊர்வலமாகச் சென்று அவசரகால நிலமை பிரகடனத்திற்கு தமது எதிர்ப்பை தெரிவித்தனர். இப்பொழுது போத்தாவின் அவசர கால நிலையை தென்னாபிரிக்க கறுப்பின பாட்டாளிவர்க்கத்தின் மிகச் சக்தி வாய்ந்த பகுதியினரான தங்கச்சுரங்கத் தொழிலாளர்கள் எதிர்க்கத் தலைப்பட்டுள்ளனர். ஐந்தரை லட்சத்திற்கு மேற்பட்ட இத்தொழிலாளர்கள் 50%மான அன்னியச் செலாவணியை நாட்டிற்கு பெற்றுக் கொடுக்கின்றனர்.

''சுதந்தர உலகிலே'' மிக அதிகமான தங்கத்தைப் பெறும் நாடு தென்னாபிரிக்காவே. தென்னாபிரிக்க தங்கச்சுரங்கங்களில் வர்க்கப்போராட்டம் வெடிக்கக் கூடும் என்றதும் சர்வதேச முதலாளித்துவ பொருளாதாரத்திலும், பத்திரிகை உலகத்திலும் பெரும் பாதிப்பு அலைகளை கிளப்பியுள்ளது. தென்னாபிரிக்க இனவெறி அரசிற்கும் உலக முதலாளித்துவத்திற்குமிடையே தங்கமே முக்கிய பிணைப்பாக விளங்குவதோடு தென்னாபிரிக்க முதலாளித்துவத்திற்கும் அப்பத்தைட் அடிமைத் தொழில் நிறுவனங்களுக்குமிடையே அதுவே முக்கிய இணைப்பாக இருக்கிறது.

சுரங்கத் தொழிலாளரின் தேசிய ஒன்றியத்தின் தோற்றுவாயும், தொழிலாளருக்கான தட்டுப்பாடும் கறுப்பின சுரங்கத் தொழிலாளர்களின் கூலியை உயர்த்தும் நிர்ப்பந்தத்திற்கு அப்பத்தைட் எஜமானர்களை ஆளாக்கியுள்ளது.

25 ஆண்டுகளுக்கு முன்னர் இத்தகைய கொடூரமான அவசரகால நடவடிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்டன. 156 நாட்கள் நீடித்த இந்த அவசரகால நிலைப் பிரகடனத்தை பயன்படுத்தி ஆட்சியாளர் 11000க்கும் மேற்பட்ட கறுப்பின போராளிகளை சிறையிலடைத்தனர். நிறவெறி அரசினை எதிர்த்த சகல நிறுவனங்களும் முறியடிக்கப்பட்டன. அவற்றின் தலைவர்கள் ஒன்றில் தலைமறைவாக வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகினர். அல்லது கொல்லப்பட்டனர். அல்லது சிறையிலிடப்பட்டனர் அல்லது நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டனர். வெள்ளையின துவேச ஆட்சியை எதிர்த்த கறுப்பின எதிர்ப்பு இயக்கம் ஒரு தசாப்தத்திற்கு முறியடிக்கப்பட்டது. ஆனால் இன்று நடைபெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் 1950-ல் நடைபெற்ற எதிர்ப்பு இயக்கங்களை விட விரிவானவையாக இருப்பதோடு, போர்க்கோலம் மிக்கவையாயும் உள்ளன. புதிய கறுப்பின தலைமுறை பழைய சாத்வீகக் கோட்பாட்டுக்குள் நிற்கத் தயாராக இல்லை. இந்தப் புதிய தலைமுறை வியட்நாமில் அமெரிக்கா மூக்குடைக்கப்பட்டதை நன்கு உணர்ந்திருக்கிறது. அங்கோலாவிலும், மொசாம்பிக்கிலும் போர்த்துக்கேயரின் காலணித்துவ ஆட்சி தூக்கி எறியப்பட்டதை அது அறிந்திருக்கிறது. அங்கோலாவில் கியூபன் துருப்புக்கள் தென்னாபிரிக்க இராணுவத்தை பின்தள்ளியதை இந்தத் தலைமுறை அறிந்திருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அரைக்கோடிக்குமேலான கறுப்பின தொழிலாளி வர்க்கம் வளர்ச்சியுற்றுள்ளது.

தென்னாபிரிக்காவின் கறுப்பின தேசியவாதத் தலைமை இந்த எதிர்ப்பு இயக்கங்களை நிறவெறி அரசின் சாவு மணியென்றே கணிப்பிடுகின்றனர். ஆனால் இந்தக் கட்டத்தில் தேசியவாத அடிப்படையில் நேரடியான இராணுவ மோதல் கறுப்பின வெகுஜனங்களுக்கு பேரழிவை ஏற்படுத்தும்.

மார்க்ஸியவாதிகள் அப்பத்தைட் அரசு அதாவது வெள்ளையின முதலாளித்துவ ஆட்சி படிப்படியாகக் குலைக்கப்பட முடியாததென்பதை உணர்கின்றனர். இன்றுள்ள நிலையில் நிராயுதபாணிகளாயுள்ள கறுப்பின வெகுஜனங்களுக்கு இராணுவ மோதல் பாதகமாகவே அமையும் என்பதையுமே அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தென்னாபிரிக்க நிலைமைக்கு பூர்சுவா ஜனநாயகத் தீர்வு கிடையாது. ஓர் ஆளுக்கு ஓர் வாக்கு என்றால் வெள்ளையரின் அரசியல் அதிகாரம் மட்டுமல்ல அவர்களது பொருளாதார மேலாதிக்கமும் பறிபோய்விடும். ஆனால் முற்போக்கான ஒரு தீர்வு உண்டு. அது முதலாளித்துவத்தினதும், தேசியவாதத்தினதும் அமைப்பை உடைத்தெறியும் ஒன்றாகவே இருக்கும். தென்னாபிரிக்காவிலே கறுப்பின பாட்டாளி வர்க்கம் உண்டு. அதன் சக்தி ஓங்கி வளர்வதை அது உணர்ந்துள்ளது. அதன் வர்க்க ஆட்சிக்கு தென்னாபிரிக்க கறுப்பின பாட்டாளி வர்க்கத்தை தயார்படுத்துவது அவசியம்.

தென்னாபிரிக்காவில் பாட்டாளி வர்க்க ஆட்சியே சோசலிச நிர்மாணத்திற்கு வழிகோலும்.

அண்மையில் 'பெண்களுக்கு எச்சரிக்கை' எனும் துண்டுப்பிரசுரம் 'நன்மை விரும்பித் தமிழ் மக்களால்' யாழ் குடாநாட்டில் விநியோகிக்கப்பட்டிருந்தது. இப்பிரசுரத்தினூடாக பெண்கள் மீதான அடக்குமுறைக்கு வழிகோலப்பட்டிருந்தது. ஆண் சமுதாயத்தின் அடக்குமுறைகளுக்கெதிராகப் பெண்கள் போராடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், பெண்விடுதலை பற்றிய தெளிவின்மை காரணமாக ஒரு சிலர் தவறான முறையில் நடந்துகொள்வது தவிர்க்கப்படவேண்டியதே. இதற்குப் பெண் விடுதலை பற்றிய சரியான கருத்துக்களை முன்வைத்து செயற்படுதலே தீர்வாக அமைய முடியும். ஆனால் அடக்குமுறையின் வெளிப்பாடாய் இது போன்ற பிரசுரங்கள் வெளியிடப்படுவதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துக்கள்

நியூ லங்கா றேடர்ஸ்
222 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி:-24187

வாழ்த்துக்கள்

நியூ லலிதா ஜுவல்லர்ஸ்
74/1 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

வாழ்த்துக்கள்

ரஞ்சனாஸ்
17, 18 18A நவீன சந்தை
யாழ்ப்பாணம்
தொலைபேசி:-24015

தரமான
போட்டோஸ்ரற்
பிரதிகளுக்கு

சன்லைற் றைக்கிளினர்ஸ்
மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி:-22825



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த விலை

சிறந்த தரம்

உங்கள் விருப்பத்திற்கேற்ப
சேலைவகைகள் மற்றும் காஞ்சிபுரம், மணிப்புரி
பட்டுவேட்டி சேட்டிங் சூட்டிங்
போன்றவற்றை பெற்றுக்கொள்ள

அரஸ் ஜவுளியகம்

142 நவீன சந்தை, மத்திய வீதி
யாழ்ப்பாணம்.

தொலைபேசி—2400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org